




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 247 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 247 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(19–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–6
பிறை: தேய்பிறை
திதி
துவிதியை நண்பகல் 1.32 வரை பிறகு திருதியை.
நட்சத்திரம்:
பரணிகாலை 926 வரை பிறகு கார்த்திகை.
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
மாலை 4.30–6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | ஆதாயம் |
| ரிஷபம் | சாந்தம் |
| மிதுனம் | வரவு |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | சுபம் |
| கன்னி | லாபம் |
| துலாம் | நலம் |
| விருச்சிகம் | இரக்கம் |
| தனுசு | சுகம் |
| மகரம் | அமைதி |
| கும்பம் | உதவி |
| மீனம் | பண்பு |

## மேற்குத் தொடர்ச்சி மலை டெல்டா மாவட்டங்களில் ஏப். 23 வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஏப்.19:**

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் ஏப். 23 வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு: மகாராஷ்டிர மாநிலம், மரத்வாடா முதல் மன்னார் வளைகுடா வரை உள் கர்நாடகம், ராயலசீமா, தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதன் காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஏப். 23 வரை லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புகர் பகுதிகளில் சனிக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மழை அளவு: தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கோவை மாவட்டம், சிஞ்சுவாடி பகுதியில் 10 மி.மீ. மழை பதிவானது.

வெப்ப நிலை: உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்ப நிலை ஒருசில இடங்களில் ஏப். 21வரை சற்று அதிகமாக இருக்கும். தமிழகத்தில் அதிகபட்சமாக ஈரோடு, பரமத்தி வேலூர் ஆகிய பகுதிகளில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது.


# உலகின் செல்வாக்கு மிக்க தலைவர் பட்டியல்: பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலிடம்

**புதுடெல்லி, ஏப்.19:**

உலகின் 24 ஜனநாயக நாடுகளில் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில், பெரும்பான்மை ஆதரவினைப் பெற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். அதேவேளையில், மக்கள் செல்வாக்கை இழந்த தலைவர்களின் பட்டியலில் ஜெர்மனி பிரதமர் பிரெடரிக் மெர்ஸ் முதலிடம் பெற்றுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மார்னிங் கன்சல்ட் என்ற ஆய்வு நிறுவனம், பல்வேறு நாட்டுத் தலைவர்களின் செயல்பாடுகள் குறித்து சமீபத்தில் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது. இந்த ஆய்வின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

24 ஜனநாயக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று அதாவது 70 சதவீத மக்களின் ஆதரவுடன்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவராகத் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்தபடியாக தென் கொரிய அதிபர் லீ ஜே-மியுங் 63 சதவீத ஆதரவுடன் இரண்டாம் இடத்தையும், செக் குடியரசு பிரதமர் ஆண்ட்ரே பாபிஷ் 55 சதவீத ஆதரவுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

மறுபுறம், ஜெர்மனி பிரதமர் பிரெடரிக் மெர்ஸின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை என்று அந்த நாட்டு மக்களில் சுமார் 76 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் உலக அளவில் செல்வாக்கு குறைந்த தலைவர்கள் பட்டியலில் அவர் முதலிடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்தபடியாக பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் 75 சதவீத மக்களின் அதிருப்தியைப் பெற்று, செல்வாக்கு குறைந்த தலைவர்களில் இரண்டாம் இடத்தில் உள்ளார். ஈரான் உடனான போர்ச் சூழலுக்கு மத்தியிலும், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 38 சதவீத மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார். இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரிய பொருளாதார நாடுகளில் 6-ஆவது இடத்துக்கு சென்ற இந்தியா: ஐஎம்எஃப்

**புதுடெல்லி, ஏப்.19:**

சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) வெளியிட்ட பெரிய பொருளாதார நாடுகளின் தரவரிசையில் 5-ஆவது இடத்திலிருந்து 6-ஆவது இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. பிரிட்டன் 6-ஆவது இடத்திலிருந்து 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்தது மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ஜிடிபி) அடிப்படை ஆண்டை 2011-12-இலிருந்து 2022-23-ஆக மாற்றியமைத்தால் இந்தியா ஓரிடம் பின்தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜப்பானை பின்னுக்குத் தள்ளி 4-ஆவது இடத்துக்கு முன்னேற முடியும் என மத்திய அரசு எதிர்பார்த்தது.

ஐஎம்எஃப் தரவின், கடந்த 2024-இல் இந்தியாவின் ஜிடிபி 3.76 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. பிரிட்டனின் ஜிடிபி 3.7 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. கடந்த



ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி மதிப்பு 3.92 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நிலையில், பிரிட்டனின் ஜிடிபி 4 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்தது.

இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இருந்த போதிலும், கடந்த சில மாதங்களாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவைக் கண்டது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்தியாவின் ரூபாய் மதிப்பு கடந்த 2024-இல் 84.57-இலிருந்து 2025-இல் 88.48-ஆக வீழ்ச்சியடைந்தது. நிகழாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்து 92.59 செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க டாலருக்கு எதிராக பிரிட்டனின் பவுண்ட் மதிப்பு வலுவடைந்து வருகிறது.

ஐஎம்எஃப் தரவின் அடிப்படையில், நிகழாண்டில் பணமாற்ற விகிதத்தின் அடிப்படையில் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 6-ஆவது இடத்தில் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அடுத்த ஆண்டில் பிரிட்டனை மட்டுமல்லால் ஜப்பானையும் கடந்து 4-ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 2025-26 நிதியாண்டில் தங்கம் இறக்குமதி 24% அதிகரிப்பு: ரூ.6.6 லட்சம் கோடியைத் தாண்டி புதிய உச்சம்

**புதுடெல்லி, ஏப்.19:**

கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 2025-26 நிதியாண்டில், இந்தியாவின் தங்கம் இறக்குமதி 24 சதவீதம் அதிகரித்து, 7,198 கோடி டாலராக (சுமார் ரூ.6.65 லட்சம் கோடி) புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

முந்தைய 2024-25-ஆம் நிதியாண்டில் தங்கம் இறக்குமதி 5,800 கோடி டாலராக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதேநேரம், தங்கம் இறக்குமதியின் அளவு முந்தைய ஆண்டை காட்டிலும் 4.76 சதவீதம் சரிவடைந்துள்ளது. முந்தைய நிதியாண்டில் 757.09 டன்னாக இருந்த இறக்குமதி, தற்போதைய கணக்கீட்டின்படி 721.03 டன்னாகக் குறைந்துள்ளது.

கடந்த நிதியாண்டில் ஒரு கிலோ தங்கத்தின் சராசரி விலை



சுமார் 76,617 டாலரிலிருந்து 99,825 டாலராக உயர்ந்தது. இவ்வாறு சாவதேச சந்தையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவில் அதிகரித்ததே இந்த மதிப்புக் கூடுதலுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

வெள்ளி இறக்குமதி....: கடந்த நிதியாண்டில் வெள்ளி இறக்குமதி சுமார் 150 சதவீதம் அதிகரித்து, 1,200 கோடி டாலரை எட்டியுள்ளது. அளவீட்டு ரீதியாக 7,334.96 டன் வெள்ளி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 42 சதவீதம் அதிகமாகும்.

ஸ்விட்சா்லாந்திலிருந்து.....: ஐரோப்பிய நாடான ஸ்விட்சா்லாந்திலிருந்துதான் இந்தியா அதிகப்படியாக 40 சதவீத தங்கத்தை இறக்குமதி செய்கிறது.

கடந்த நிதியாண்டில் நிதியாண்டில் ஸ்விட்சா்லாந்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த இறக்குமதி 11.36 சதவீதம் உயா்ந்து 24.27 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக ஐக்கிய அரபு அமீரகம் (16 சதவீதம்), தென்னாப்பிரிக்கா (10 சதவீதம்) ஆகிய நாடுகள் உள்ளன.

பொருளாதாரப் பாதிப்பு: தங்கம் மற்றும் வெள்ளியின் இந்த அதீத இறக்குமதி உயா்வால் நாட்டின் வாத்தகப் பற்றாக்குறை (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கும் இடையிலான வித்தியாசம்) 33,320 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இது நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

நகைத் தொழில்துறையின் தேவையே இந்த இறக்குமதிக்கு முதன்மைக் காரணமாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு தங்கம் மற்றும் வெள்ளிப் பொருள்கள் இறக்குமதிக்கு மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் லேசான நில நடுக்கம்

**அனகாபல்லி, ஏப்.19:**

ஆந்திர மாநிலம், அனகாபல்லி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.05 மணிக்கு திடீரென லேசான நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர். இந்த மாவட்டத்தில் ராம்பில்லி, எடமஞ்சிலி, கோட்ட ஊரட்லா ஆகிய பகுதிகளில் நில நடுக்கத்தை மக்கள் உணர்ந்தனர். ரிக்டர் அளவு 3.7 ஆக பதிவாகி உள்ளது. நில நடுக்கத்தை உணர்ந்ததும் பயந்து போய் மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். நிலநடுக்கம் மீண்டும் ஏற்படும் என்ற பயத்தில் இரவு முழுவதும் மக்கள் தூங்காமல் பயத்தில் சாலைகளிலேயே கழித்தனர். பின்னர் அதிகாலை வேளையில் பயம் தெளிந்து அவரவர் வீடுகளுக்கு சென்றனர்.

# மத்திய அரசு ஊழியர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு - அதிகாரப்பூர்வ அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.19:**

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படியை 2 சதவீதம் உயர்த்தி மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருக்கிறது. பிரதமர் மோடி தலைமையில் இன்று காலை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 6,791 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவின் மூலம் சுமார் 50 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும் 68 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 55 சர்வேத்திலிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது மேலும் 2 சதவீதம் உயர்த்தப்பட்டு அது 60 ஆக உயர்ந்திருக்கிறது. உலகலாவிய சூழல் அதிகரித்து வரக்கூடிய லைவாசி ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவற்றை ஈடுகட்டுவதற்காக இந்த அகவலைப்படி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

# சட்டப்பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணி: தமிழக காவல் துறைக்கு ரூ.57.65 கோடி ஒதுக்கீடு

**புதுடெல்லி, ஏப்.19:**

தமிழக சட்டப்பேரவைத் தோதல் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீஸாருக்கு உணவுப்படி, சிறு செலவினங்களுக்காக ரூ.57.65 கோடி ஒதுக்கப்பட்டது.

தோதல் நாளன்று அசம்பாவித சம்பவங்களைத் தடுக்கும் வகையிலும், மக்கள் அமைதியாக, சுதந்திரமாக வாக்களிக்கவும் காவல் துறை கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை எடுத்து வருகிறது. தமிழகத்தில் சுமாா 5.73 கோடி வாக்காளாகள் உள்ளனா. இவாகள் வாக்களிப்பதற்காக மாநிலம் முழுவதும் 75,032 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3,022 இடங்களில் உள்ள 5,938 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை. இந்த வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப் படையினா பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனா.

வாக்குப்பதிவு நாளான ஏப். 23-ஆம் தேதி காவல் துறையினா,



துணை ராணுவத்தினா், தீயணைப்புப் படையினா, வனத் துறையினா, சிறைத் துறையினா, ஓய்வு பெற்ற ராணுவ வீராகள், போலீஸாா, ஊா்க்காவல் படையினா் என சுமாா் 1.40 லட்சம் போ் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனா. பாதுகாப்பு பணிக்காக 295 கம்பெனிகளை சோ்ந்த சுமாா் 30,000 துணை ராணுவப் படையினா தமிழகம் வந்துள்ளனா். இவா்கள் அனைவரும் ஏப்ரல் 21-ஆம் தேதி வாக்குப் பதிவு பாதுகாப்பு பணிக்காக புறப்பட்டுச் செல்கின்றனா.

ரூ.57.65 கோடி ஒதுக்கீடு: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான மே 4-ஆம் தேதி மாநிலம் முழுவதும் போலீஸாா் முழுமையான அளவில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனா. பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீஸாருக்கு உணவுப்படி, சிறு செலவினத்துக்காக ரூ.57,65,52,600 தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இதற்கான உத்தரவை அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலா கே.மணிவாசன் பிறப்பித்துள்ளாா.

இதில் காவல் ஆய்வாளா, உதவி ஆய்வாளா, சிறப்பு உதவி ஆய்வாளா ஆகியோருக்கு உணவுப்படி, சிறு செலவினமாக ஒரு நாளுக்கு ரூ.900, தலைமைக் காவலா, காவலா ஆகியோருக்கு ஒரு நாளுக்கு ரூ.850 வழங்கப்படுகிறது. இதேபோல தீயணைப்புத் துறை அதிகாரிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.900, தீயணைப்புத் துறை வீராகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.850, சிறைத் துறை அதிகாரிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.900, சிறைக் காவலாகளுக்கு ரூ.850 வழங்கப்படுகிறது.

இந்தப் பணம் தோதல் பாதுகாப்பு பணிக்கு புறப்படுவதற்கு முன்பு போலீஸாரிடம் வழங்கப்படும் என்று காவல் துறை உயா அதிகாரிகள் தெரிவித்தனா.




## தாம்பரம் அருகே செம்பாக்கத்தில் உரிய ஆவணம் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடியே 2 லட்சம் சிக்கியது



**தாம்பரம், ஏப்.19:** தாம்பரம் தேர்தல் பறக்கும் படை அதிகாரி தினேஷ் தலைமையில் போலீசார் தாம்பரம்- வேளச்சேரி பிரதான சாலை, செம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் பள்ளி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த வேன் ஒன்றை மடக்கிய அதிகாரிகள் சோதனை செய்தபோது அதில் கட்டு கட்டாக பணம் இருந்தது.

இதனைத் தொடர்ந்து அவற்றை பறிமுதல் செய்த பறக்கும் படை அதிகாரிகள் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

அங்கு வருவாய் கோட்டாட்சியர் முரளி, வட்டாட்சியர் நடராஜ், சேலையூர் ஆய்வாளர் டில்லி பாபு ஆகியோர் முன்னிலையில் பணத்தை வேனில் கொண்டு வந்த ராஜேஷ் (30), கபிலன் (42) ஆகியோரிடம் பணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது அவர்கள் அரசு மதுபான கடைகளில் இருந்து வசூல் செய்த பணத்தை அம்பத்தூர் கொண்டு செல்வதாக தெரிவித்தனர்.

அதிகாரிகள் அந்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது அதில் ஒரு கோடியே, இரண்டு லட்சத்து, 60 ஆயிரத்து, 717 ரூபாய் இருந்தது தெரிய வந்தது.

ஆனால் பணத்திற்கான எந்த ஆவணமும் இல்லாததாலும், பணத்தைக் கொண்டு வந்த இருவரும் தெரிவித்த தகவல்களில் முரண்பாடுகள் இருந்ததாலும் பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் வருமானவரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து அவர்களிடம் பணத்தையும், பணத்தை கொண்டு வந்த இருவரையும் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து வருமானவரித்துறையினர் பணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நோயாளிகளிடம் மருத்துவர்கள் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும்: தேசிய மருத்துவ ஆணைய தலைவர் அறிவுறுத்தல்

**சென்னை,ஏப்.19:** போரூரில் உள்ள ஸ்ரீராமச் சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 41-வது பட்டமளிப்பு விழா, கல்வி நிறுவன வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் இளநிலை, முதுநிலை மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி முனைவர் படிப்புகள், துணை மருத்துவப் படிப்புகளை நிறைவு செய்த 902 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. சிறப்பிடம் பெற்ற 53 பேருக்கு தங்கப் பதக்கங்கள் கொடுக்கப்பட்டன.

ஸ்ரீராமச்சந்திரா கல்வி நிறுவனஇணைவேந்தர் ஆர்.வி.செங்குட்டுவன், துணை இணைவேந்தர் மருத்துவர் மகேஷ் வக்கமுடி, துணைவேந்தர் மருத்துவர் உமா சேகர், பதிவாளர் மருத்துவர் எஸ்.செந்தில்குமார், மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் பாலாஜி சிங், நிதித்துறை இயக்குநர் ஜெ.ரவிசங்கர் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தேசிய மருத்துவ ஆணையத்தின் (என்எம்சி) தலைவர் மருத்துவர் அபிஜத் சந்திரகாந்த் ஷேத் பேசியதாவது: மருத்துவத் துறையில் புதிதாகதடம்



பதிக்கும் இளம் மருத்துவர்கள் அனைவரும் 3 முக்கிய அம்சங்களை கடைபிடிக்க வேண்டும். முதலாவது, கனிவான மருத்துவ சேவை.

நோயாளிகள் உடல்நலக் குறைவுக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காக மட்டுமே மருத்துவர்களை நாடுவதில்லை. அவர்களுக்கு உள்ள அச்சமும், பதற்றமும், தெளிவின்மையும் மருத்துவரை அணுகினால் சரியாகும் என நம்புகிறார்கள்.

அதனை கருத்தில் கொண்டு அவர்களிடம் கனிவான வார்த்தைகளில் பேச வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை கவனத்துடன் கேட்டறிய வேண்டும். நம்பிக்கையுடன் அவர்களை வழி நடத்த வேண்டும். அதி நவீன மருத்துவ சிகிச்சைகள் அளிக்கும் பலன்களைக் காட்டிலும் இதுதான் வலிமையானது.

இரண்டாவதாக, மருத்துவர்கள் அனைவரும் வாழ்நாள் முழுவதும் மாணவர்களாக இருக்க வேண்டும். புதிய தொழில்நுட்பங்கள், மருத்துவ ஆய்வுகள், நோய்களுக்கான தீர்வுகள் என அனைத்து விஷயங்களையும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

மூன்றாவது நெறி சார்ந்து செயல்படுதல். நோயாளிகள் தங்கள் வாழ்வையே மருத்துவர்களிடம் நம்பி ஒப்படைக்கிறார்கள். அதற்கு பிரதிபலனாக மருத்துவ சேவையாற்றும்போது, நெறி சார்ந்து இயங்குதல் மிகவும்அவசியம் ஆகும். மருத்துவர்கள் நெறிகளை மறவாமல் சமூகத்துக்குப் பங்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பொதுமக்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த விஜய்– குழந்தைகளுடன் பேசி மகிழ்ந்தார்



**சென்னை, ஏப்.19:** விஜய் சிறிதுநேரம் பணி மனையை சுற்றி பார்த்தார். பின்னர் அங்கு இருந்த பெண்களுடன் விசில் கோலம் வரைந்தார்.

தேர்தல் பணிமனைக்கு விஜய் வந்திருக்கும் தகவல் அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளுக்கு பரவியது. இதை அறிந்ததும் அந்த பகுதியில் உள்ள பெண்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் குடும்பத்துடன் விஜய்யை பார்க்க ஆர்வமுடன் திரண்டு வந்தனர். விஜய்யை நேரில் கண்டதும் குழந்தைகள் பலர் விசில் ஊதி ஆரவாரம் செய்து உற்சாகம் அடைந்தனர்.

அதனை தொடர்ந்து விஜய் அருகில் உள்ள வீடுகளுக்கு சென்றார். ஒவ்வொரு வீடாக சென்ற அவர் அந்தந்த குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். வீட்டுக்குள் நுழைந்ததும் அங்குள்ள பெண்கள் முதலில் விஜய்க்கு தண்ணீர் கொடுத்து உபசரித்தனர். அந்த தண்ணீரை வாங்கி விஜய் பருகினார். அப்போது விஜய்க்கு பெண் ஒருவர் விபூதி பூசி தேர்தலில் வெற்றி பெறுவீர்கள் என்று வாழ்த்தினார்.

தொடர்ந்து அடுத்தடுத்த வீடுகளில்உள்ள குழந்தைகளுடன் அமர்ந்து விஜய் பேசி மகிழ்ந்தார். பின்னர் பொதுமக்களிடம் விசில் சின்னத்தில் மறக்காமல் வாக்களியுங்கள் என்று கூறினார். அதன் பிறகு விஜய் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

பெரம்பூர் பகுதியில் உள்ள வீடுகளில் விஜய் திடீரென்று விசிட் அடித்த காட்சிகள் சமூக வலைதளங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் வைரலாகி வருகிறது.

## திருவொற்றியூர் தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் வேட்பாளர்கள் – களம் எப்படி?



**திருவொற்றியூர், ஏப்.19:** திருவொற்றியூர் சட்டப் பேரவை தொகுதியில் திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என 15 பேர் களத்தில் உள்ளனர்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் - எல். சுந்தர்ராஜன்**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் எல்.சுந்தர்ராஜன், ஒப்பந்த தொழிலாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் தொழிற்சங்க பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

எம்எல்ஏவாகதேர்ந்தெடுக்கப் பட்டால் முதல் வேலையாக அனைத்து வீடுகளுக்கும் 24 நேரமும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், தொழிலாளர்கள், மீனவர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்கவும், அவர்கள் வாழ்வு மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வேன் எனவும் கூறி வாக்கு சேகரிக்கிறார்.

**அதிமுக - கே.குப்பன்**

அதிமுக வேட்பாளரான கே.குப்பன், அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திடங்களை முன்வைத்து தீவிர பிரச்சாரம் மேற்கொள்கிறார்.


### கோட்டக்குப்பம் அருகே
## மீனவர்கள் கடலில் இறங்கி போராட்டம் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவிப்பு

**புதுவை, ஏப்.19:** புதுவை அடுத்த தமிழக பகுதியான கோட்டகுப்பம் நகராட்சிக்குட்பட்ட நடுக்குப்பம் மீனவர்கள் சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக கூறி கடலில் இறங்கி கருப்பு கொடி ஆர்பாட்டம் நடத்தினர்.

அப்போது நடுக்குப்பம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என சுமார் 500-க்கும் மேற்பட்டோர் கடலில் இறங்கி அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

கடலில் இறங்கி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதை அறிந்த கோட்டகுப்பம் போலீஸ் இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன், கடலோர காவல் படை இன்ஸ்பெக்டர் அம்பிகா சப்-இன்ஸ்பெக்டர் சுரேஷ் மற்றும் 50-க்கும் மேற்பட்ட போலீசார் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கடலில் இறங்கி போராட்டம் நடத்திய மீனவர்களை சமாதானப்படுத்தினர். போலீசாரின் பேச்சு வார்த்தைக்குஇணங்கமீனவர்கள் போராட்டத்தை கைவிட்டு களைந்து சென்றனர்.

இதுகுறித்து போராட்டம் நடத்திய மீனவர்கள் கூறுகையில்,



பெரியக்கோட்டக்குப்பம் பகுதியில் வாழும் ஆதிதிராவிடர் மக்களின் சுடுகாட்டுக்கும் கடலுக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைவாக இருக்கிறது.

இதனால் கடல் அரிப்பின் போது சடலங்கள் வெளியே வருகிறது. மேலும் சடலங்களை மீன்கள் சாப்பிடுவதால் அதனை உணவாக சாப்பிடும் மனிதர்களுக்கு பலவிதமான நோய்கள் உருவாகிறது.

இந்த சுடுகாட்டில் புதைக்கப்படும் சடலங்களால் நடுக்குப்பம் மீனவர்களின் குடிநீரும் பாதிப்படைந்துள்ளது. இந்த சுடுகாட்டை அப்புறப் படுத்த கோரி கடந்த 30 ஆண்டுகளாக நடுக்குப்பம் மீனவர்கள் கோரிக்கை வைத்தும் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததால் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்கிறோம் என கூறினர்.

மேலும் நடுக்குப்பம் மீனவ கிராம மக்கள் தேர்தலை புறக்கணிப்பதாக கூறி பல்வேறு இடங்களில் பதாகைகளை வைத்துள்ளனர்.

இதுபோல பெரியகோட்டக் குப்பம் ஆதிதிராவிடர் மக்களும் சுடுகாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு அதிகாரிகள் அப்புறப்படுத்தாததால் தேர்தலை புறக்கணிப்பதாக பல்வேறு இடங்களில் பதாகைகள் வைத்துள்ளதால் கோட்டகுப்பம் நகராட்சி பகுதியில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது.

## வேளச்சேரி தொகுதியில் வீதி வீதியாக காங். வேட்பாளர் அசன் மவுலானா தீவிர பிரச்சாரம்



**சென்னை, ஏப்.19:** வேளச்சேரி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் அசன் மவுலானா தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். வேளச்சேரி 176-வது வார்டில் எம்ஜிஆர் நகர், தேவி கருமாரியம்மன் நகர், கோல்டன் அவின்யு, விஜய நகர், சீனிவாசன் நகர், வஉசி, குபேர நகர், ஏஜிஎஸ் காலனி பகுதியில் நேற்றுவீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார்.

அவருடன் திமுக பகுதி செயலாளர் வே.ஆனந்தம், மாவட்ட பொருளாளர் பாஸ்கர், விசிக இளயா, மாவட்ட காங்கிரஸ் தலைவர் விஜய தனசேகர், மதிமுக மாவட்ட செயலாளர் சுரேஷ், திமுக வட்ட செயலாளர் தாமோதரன், காங்கிரஸ் பகுதி தலைவர் ஜேம்ஸ், குரியா, வட்ட தலைவர் ராமதாஸ் ரவி மற்றும் கூட்டணி நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வாக்கு சேகரிப்பின்போது அசன் மவுலானா, "இந்த 5 ஆண்டுகளில் வேளச்சேரி தொகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நீங்கள் பார்த்துள்ளீர்கள். குறிப்பாக வெள்ளச்சேரியை வேளச்சேரியாக ஆக்குவோம் என்று வாக்குறுதி அளித்தோம். மழைநீர் வடிகால் அமைத்து, அதேபோல் மாற்றி காட்டிவிட்டோம்.

அடுத்த 5 ஆண்டுகளில் இன்னும்மிகப்பெரியமாற்றத்தை வேளச்சேரி தொகுதி அடையும். இப்போதுள்ள 50 ஆண்டுகால பழைய கழிவுநீர் வடிகாலுக்கு பதிலாக, புதிய கழிவுநீர் வடிகால் அமைக்கப் படும். எப்போது வேண்டுமானாலும் என்னை செல்போனில் தொடர்பு கொள்ளலாம். உடனுக்குடன் தொகுதி பிரச்சினை தீர்க்கப்படும்" என்று கூறி மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகிறார்

### வேட்டவலம் அருகே
## பஸ் கவிழ்ந்து ஓட்டல் தொழிலாளி பலி - 16 பேர் படுகாயம்



**வேட்டவலம், ஏப்.19:** திருவண்ணாமலையில் இருந்து 30-க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று அதிகாலை விழுப்புரம் நோக்கி அரசு பஸ் சென்று கொண்டிருந்தது.

இந்த பஸ்சில் திருச்சிராப் பள்ளி மாவட்டம் லால்குடி அடுத்த மாலவாய் கிராமத்தை சேர்ந்த கனகராஜ் (வயது 40) என்பவர் பயணம் செய்தார். இவர் சமயபுரத்தில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருகிறார். பஸ் வேட்டவலம் வந்ததும் பயணிகள் இறங்கினர். மீண்டும் பஸ் வேட்டவலம் -விழுப்புரம் சாலையில் சென்றபோது டிரைவர் தூக்க கலக்கத்தில் இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையில் தறிக்கெட்டு ஓடியது.

பின்னர் சாலையோரம் உள்ள பள்ளத்தில் பஸ் கவிழ்ந்தது. பஸ்சில் பயணம் செய்த கனகராஜ் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக இறந்தார்.

ஒருவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. பயணிகள் 15 பேர் படுகாயம் அடைந்தனர். அந்த வழியாக சென்றவர்கள் இதுகுறித்து வேட்டவலம் போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் பஸ்சின் இடிபாடுகளுக்குள் சிக்கி இருந்த பயணிகளை மீட்டனர். பின்னர் படுகாயம் அடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கனகராஜ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீசார் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

## ஆற்காடு அருகே லாரிகள் நேருக்கு நேர் மோதி 2 டிரைவர்கள் பலி




**ராணிப்பேட்டை, ஏப்.19:** ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த கரிக்கந்தாங்கலை சேர்ந்தவர் பழனி. இவரது மகன் அருண்குமார் (வயது 23). லாரி டிரைவர். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் நரேஷ் (25).லாரி டிரைவர்.

நேற்று காலை அருண்குமார் செய்யாறிலிருந்து ஆற்காடு நோக்கி லாரியை ஓட்டி வந்தார். இதே போல் நரேஷ் ஆற்காட்டில் இருந்து செய்யாறு நோக்கி லாரியை ஓட்டி வந்தார். ஆற்காடு அடுத்த கலவை கூட்ரோடு, முள்ளுவாடி அருகே வந்தபோது 2 லாரிகளும் எதிர்பாராத விதமாக பயங்கர வேகத்தில் நேருக்கு நேர் மோதிக் கொண்டது.

இந்த விபத்தில் 2 லாரிகளின் முன்பகுதி நொறுங்கியது. டிரைவர்கள் 2 பேரும் லாரிகளின் இடிபாடுகளில் சிக்கி உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

அப்பகுதி மக்கள் இதுகுறித்து கலவை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். ராணிப்பேட்டை டி.எஸ்.பி கனகராஜ், கலவை இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசு மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொக்லைன் எந்திரம் மற்றும் தீயணைப்பு வீரர்கள் உதவியுடன் லாரிகளை தனித்தனியாக பிரித்தனர். லாரி டிரைவர்களின் பிணங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆற்காடு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ராமாபுரத்தில் மகனை கொன்ற தந்தைக்கு ஆயுள் தண்டனை பூந்தமல்லி நீதிமன்றம் தீர்ப்பு



**சென்னை, ஏப்.19:** சென்னை ராமாபுரம், செந்தமிழ் நகர், வேம்புலி தெருவில் வசித்து வந்த 20 வயது வாலிபரான சதீஷ், கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொலை செய்யப்பட்டார். தந்தை சக்திவேல் வீண்தகராறு செய்து கத்தியால் தாக்கியதில்தான் சதீஷ் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

தடுக்க சென்ற சக்திவேலின் மனைவி மற்றும் மகளையும் கத்தியால் தாக்கிவிட்டு சக்திவேல் தப்பி சென்றது தெரியவந்தது. இது தொடர்பான புகாரின் பேரில் ராமாபுரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சக்திவேல் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது....

மொத்தம் ரூ.7,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால், மேலும் ஒரு ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி நீதிபதி தீர்ப்பு வழங்கினார். மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த இராமாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் போலீசாரை உயரதிகாரிகள் பாராட்டினர்.

## "அன்புமணியை ஆதரிப்பது ஆபத்து" ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி சீற்றம்

**விழுப்புரம், ஏப்.19:** ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி, 'செயல் தலைவராக இல்லை, ராமதாஸின் மகளாக பேசுகிறேன்' என்று ஆவேசமாக பேசினார். "எங்களைத் 'துரோகி' என்கிறார். முதல் துரோகியே அன்புமணிதான். கட்சி மற்றும் அப்பாவின் பொருளாதாரத்தைஅபகரித்துச் சென்றவர் அன்புமணி.

கட்சியில் அனைத்தையும் அனுபவித்தது அன்புமணி. எங்களுக்கு அரசியல் ஆசை எதுவும் இல்லை. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் துணையாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் உள்ளோம்.

'அப்பாவுக்கு ஏதாவது ஆனால் தொலைத்து விடுவேன்' என்று அன்புமணி பேசுகிறார். நான் கேட்கிறேன், 'யாரை தொலைச்சுடுவ' சமூக வலைதளத்தில் என் அப்பாவை தவறாக சித்தரித்து, அவமதிக்கின்றனர். அவரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

'அக்கா' என்று கூட என்னைப் பார்க்காமல், கேவலமான பதிவு செய்கின்றனர். அன்புமணி சொல்லிதான் இது எல்லாம் நடக்கிறது. பணம், பதவிக்காக



நாங்கள் இல்லை. அப்பா, அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்பதால் உடன் இருக்கிறோம்.

அப்பாவுக்கு உடல் நிலை பாதிக்கப்படுவதற்கு காரணமே அன்புமணிதான். அப்பாவை தனிமைப்படுத்த வேண்டும் என 10 ஆண்டுகளாக திட்டம் போட்டுள்ளனர். கூடவே இருந்தும் இதுஎங்களுக்கு தெரியவில்லை.

மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் பொறுமையாக இருந்தது போல், உனக்கு பொறுமையாக இருக்க தெரியாதா..? 'எனக்கு அடுத்தது அன்புமணிதான்' என அப்பா ஏற்கெனவே கூறியிருக்கிறார். அதற்குள் உனக்கு என்ன அவசரம்? நல்ல பிள்ளையாக இருக்க முடியாதவர், எப்படி நல்ல தலைவராக இருப்பார்.

இவரை ஆதரிப்பது ஆபத்து" என்றார்.




திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318




WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!




Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com





keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com




உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள்
வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல்
பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள்
மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711




GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

அகிலாண்டேஸ்வரி நகரில்
வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு
= 30x40 = 1200 ச.அடி
மனை விலை
1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது
திருநெல்வேலி மாவட்டம்
LOCATION




குன்னத்தோழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வருவன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379




WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families




just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com




THE BEST CENTRE OF CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.




THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit / No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy / 90879 55111




அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



## கவிதை அரங்கம்!



மரணம் ஒருவேளை
நம்மைப் பிரித்தாலும், என்
காதல் உன் பின்னால்
வரும்.

அடுத்த ஜென்மம் என்று
ஒன்று இருந்தால், மீண்டும்
உனக்கே காதலன்/காதலி
ஆவேன்.

நிபந்தனைகள் இல்லாத
காதல், நம்மை
இணைக்கும் ஒரு மாயக்
கயிறு.

வயதான காலத்தில்,
உன் நரை முடியைச் சீவி
விடுவதே என் ஆசை.

நம் காதல் கதையை
உலகுக்குச் சொல்ல
வார்த்தைகள் போதாது.

## வாழ்க்கை தத்துவம்...



நல்ல எண்ணங்கள்
நிச்சயம் நம்மை
நல்வழிப்படுத்தும்
ஆகவே நல்லதையே
நினைப்போம்
நல்லதையே செய்வோம்

எல்லோரிடமும் பணிவாக
நடந்து கொள்ளாதீர்கள்
ஏனெனில் பணிவுக்கும்
அடிமைத்தனத்துக்கும்
வித்தியாசம் தெரியாத
மேதாவிகள் உண்டு

அறிவுரையை அளவோடு
கொடுங்கள் ஏனெனில்
அவரவர் சூழ்நிலைகள் வேறு
அவரவர் பாதைகளும் வேறு

## உயிர்



காணாமல் போக
வேண்டாம்
கை பிடித்து நடப்போம்!
நிறைய பேர் காணாமல்
போய்க்கொண்டி
ருக்கிறார்கள்;
காணாமல் போகும்
மனிதர்கள்,
கூடவே பலரது
இதயங்களையும்
திருடிக்கொண்டு
காணாமல்
போய்விடுகிறார்கள்.
சிறு சிறு
வருத்தங்களுக்காகவும்,
சிறு சிறு மன
சங்கடங்களுக்காகவும்
சட்டென காணாமல்
போய்விடுகிறார்கள்.
அவர்கள் மறைந்த
அந்தப் பிரிவில்
விழுந்து தவிப்பது
என்னவோ,
அவர் மேல்
அளவற்ற பாசம்
வைத்த ஏதுமறியாத
இன்னுயிர்கள் தான்.
விட்டுப் போவது என
முடிவெடுத்த பின்,
நேசித்த உறவுகளை
(இதயங்களை)
நினைத்திருந்தால்...
காணாமல் போக மனது
வராது!
காணாமல் போக
வேண்டும், இல்லாமல்
போக வேண்டும் என
முடிவெடுத்து விட்டால்,
உறவுகளை
நேசித்திருக்கவே
கூடாது.
சட்டென்று எடுக்கும்
முடிவுகளால்,
இங்கு சமாதிகள்
அதிகமாகி வருகின்றன.
"புரிந்து கொள்வோரிடம்
பேசுவோம்" என்ற
மனநிலையில்
இன்று எவருமே
இல்லை.
புரிந்து கொள்ளும்
மனநிலை நிறையவே
இருக்கிறது;
ஆனால், அந்த
மனங்களை, அந்த
இதயங்களைக்
கண்டுபிடிப்பதுதான்
அரிதாக இருக்கிறது.
பிடித்தவரிடம்
பேசுங்கள்; பிடித்ததைச்
செய்யுங்கள்.
அளவு கடந்த
அன்பு வேண்டாம்,
எல்லையில்லாத காதல்
வேண்டாம்,
முடிவில்லாத
நேசம் வேண்டாம்...
முக்கியமாக (அளவற்ற)
நம்பிக்கை வேண்டாம்.
வாழுங்கள்... காணாமல்
போக வேண்டாம்!

உங்கள் வாழ்க்கை
உங்களுக்கானது
மட்டுமல்ல;
அந்த வாழ்க்கையில்
சில பூக்களும், சில
மொட்டுகளும்,
இளம் சிட்டுகளும்
இருக்கின்றன.
உங்களை வழிகாட்டியாக
நினைத்திருப்பவர்களுக்கு,
காணாமல் போய்
மனதை உடைக்க
வேண்டாம்.
துணையாக நின்று
என்றும் அவர்கள்
மனதைக் கவர்ந்து
கொள்ளுங்கள்.
சிகரங்களின் தூரம்
எல்லோருக்கும்
தெரியும்;
ஆனால்,
அதனை எளிதில்
அடையலாம் எனக்
கற்றுத்தந்தவர்களே
காணாமல் போவதுதான்
கவலை அளிக்கிறது!

சிலுவை இறப்புக்கானது
அல்ல மீட்புக்கானது

----

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

டாக்டர்: "உங்களுக்கு ரொம்ப பலவீனமா இருக்கு, டெய்லி ஒரு ஆப்பிள் சாப்பிடுங்க."
நோயாளி: "எந்த கம்பெனி ஆப்பிள் டாக்டர்? ஐபோன் 15-ஆ இல்ல 16-ஆ?"



நோயாளி: "டாக்டர், தூக்கத்துல எனக்குப் பேய் வருது."
டாக்டர்: "பரவாயில்லை, அது வரட்டும், நீங்க வராம இருந்தா சரி!"

## தினம் ஒரு சமையல்



# பாறை மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1/2 கிலோ | -பாரை மீன் |
| 1 கைப்பிடி | -சின்ன வெங்காயம் |
| 10 பல் | -பூண்டு |
| 1/4 கப் | -நல்லெண்ணெய் |
| 2 | -பச்சை மிளகாய் |
| 1 தேக்கரண்டி | -மிளகாய்த்தூள் |
| 1 மேஜைக்கரண்டி | -மல்லித்தூள் |
| 1/4 தேக்கரண்டி | -மஞ்சள் தூள் |
| தேவையானஅளவு | -உப்பு |
| 1 சிறிய துண்டு | -தேங்காய் |
| 3 | -தக்காளி |
| கொஞ்சம்கொத்தமல்லி கருவேப்பிலை | |
| 1/4 கப் | -புளிக்கரைசல் |

செய்முறை:



எடுத்து வைத்துள்ள வெங்காயத்தில் ஒரு பத்து வெங்காயத்தை ஒன்றும் பாதியுமாக நிறுத்திக் கொள்ளவும் மீதி வெங்காயத்தை நைசாக அரைத்துக் கொள்ளவும்.

கடாயில் எண்ணெய் சேர்த்து சூடானதும் நறுக்கிய வெங்காயம் மற்றும் பூண்டு பற்களை சேர்த்து பொன்னிறமாக வதக்கவும் பிறகு வெங்காய விழுதைச் சேர்த்து நன்றாக வதக்கவும் இதில் கீறிய பச்சை மிளகாயை சேர்த்துக் கொள்ளவும்.

அதன் பின் மிளகாய்த்தூள் மல்லித்தூள் மஞ்சள்தூள் சேர்த்து வதக்கி கூடவே புளிக்கரைசலை சேர்த்து 10 நிமிடம் மிதமான தீயில் நன்றாக பச்சை வாசனை போகும் வரை கொதிக்க விடவும்.

கடைசியில் தக்காளியை தேங்காயை சேர்த்து மைய அரைத்து இதில் சேர்க்கவும். இப்பொழுது குழம்பிற்கு தேவையான அளவு தண்ணீர் மற்றும் உப்பு சேர்க்கவும். இதனை 5 நிமிடம் கொதிக்க விடவும்.

அதன்பின் மீன் துண்டுகளை சேர்த்து கொத்தமல்லி கறிவேப்பிலையை நறுக்கி சேர்க்கவும். மூடி போட்டு மிதமான தீயில் 3 நிமிடம் கொதிக்க விட்டு அடுப்பை அணைக்கவும்.

## அழிஞ்சில் பயன்கள்



அழிஞ்சி பழத்தின் அபூர்வ நன்மைகள்!

உடல் சூடு

நமது உடலின் சராசரி வெப்பநிலை அனைத்து காலங்களிலும் சீராக இருப்பது அவசியம் ஆகும். கோடைக்காலங்களில் பலருக்கும் உடல் வெகு சீக்கிரத்தில் உடல் உஷ்ணமடைந்து தலைவலி, உடல் சோர்வு உட்பட பல பாதிப்புகளை ஏற்படுத்தி, கடுமையான கோடை காலங்களில் அழிஞ்சி பழம் சாப்பிட்டு வந்தால் உடல் குளிர்ச்சி அடைவதோடு, உடற்சோர்வு நீங்கி உடலுக்கும், மனதிற்கும் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.

குடற்புழுக்கள்

சாக்லேட், இனிப்புகள் அதிகம் சாப்பிடுவதால் குழந்தைகள் அதிலும் குறிப்பாக 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வயிற்றில் குடற்புழுக்கள் உற்பத்தியாகி, அவர்களின் உடல் நலத்தை பாதித்து, உடலளவிலும் மனதளவிலும் சோர்வடையச் செய்கிறது. வயிற்றில் இருக்கும் புழுக்களை அழிக்க சிறந்த இயற்கை மருந்தாக அழிஞ்சி பழம் இருக்கிறது. இந்த பழங்களை குழந்தைகள் அடிக்கடி சாப்பிடக் கொடுத்து வந்தால் குடற்புழுக்கள் அழிந்து, மலத்தின் வழியாக உடலை விட்டு அவை வெளியேறும்.

உடல் எடை கூட

நவீன மருத்துவ அளவுகோலின் படி ஒவ்வொரு மனிதரும் அவரின் உடல் உயரத்திற்கு ஏற்ற அளவில் உடல் எடை பெற்றிருக்கவேண்டும் என அறிவுறுத்துகிறது. ஒரு சிலர் சராசரி உடல் எடைக்கு கீழாக இருக்கின்றனர். இத்தகையவர்கள் சீக்கிரம் உடல் எடை கூட்ட அடிக்கடி அழிஞ்சி பழம் சாப்பிட வேண்டும். இதில் இதில் இருக்கும் சத்துகள் உடல் எடை அதிகரிக்க உதவுகிறது.

# பிறந்தநாளில் வெளியான வீடியோ.. விக்ரமின் 63-வது படம் எப்படி இருக்கும்?






நடிகர் விக்ரம் தனது பிறந்தநாளை முன்னிட்டு ரசிகர்களுக்கு சிறப்பு சர்ப்ரைஸாக தனது 63வது திரைப்பட டீசரை வெளியிட்டுள்ளார். இன்று அவரது பிறந்தநாளை ஒட்டி இந்த அப்டேட் வெளியாகி, சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த புதிய படத்தை ஆனந்த் சங்கர் இயக்குகிறார். இதற்கு முன் வித்தியாசமான கதைக்களங்களுடன் பல படங்களை இயக்கிய இவர், விக்ரமுடன் இணைவதால் இந்த படம் மீது அதிக எதிர்பார்ப்பை உருவாகியுள்ளது.

மேலும், இப்படத்திற்கு இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் பணியாற்றுகிறார். தனது தனித்துவமான இசை ஸ்டைலால் ரசிகர்களை கவர்ந்தவர் என்பதால், இந்த கூட்டணி ரசிகர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

விக்ரம் தனது ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடிப்பதற்காக அறியப்பட்டவர். அந்த வகையில், இந்த 63வது படமும் புதுமையான கதையையும், சக்திவாய்ந்த நடிப்பையும் கொண்டு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிறந்தநாளை ஒட்டி வெளியிடப்பட்ட டீசர் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இந்த படத்தின் அடுத்தடுத்த அப்டேட்களுக்கு ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.






பிரக்யா நக்ரா இன்ஸ்டாக்ராமில் 1.3 மில்லியன் ரசிகர்களை வைத்து இருக்கிறார்.

அவர் தற்போது ஹாட் உடையில் கவர்ச்சி போட்டோஷூட் ஸ்டில்களை வெளி யிட்டுள்ளார். இதோ.

# "ஜனநாயகன்" பாணியில் சிக்கிய "ஜெயிலர்-2"! - ஷூட்டிங் ஸ்பாட்டில் நடந்த அந்த பகீர் சம்பவம்



நடிகர் விஜய் நடிப்பில் உருவாகி உள்ள 'ஜனநாயகன்' திரைப்படத்தின் காட்சிகள் சமீபத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தற்போது ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் 'ஜெயிலர்-2' படமும் அதேபோன்ற சிக்கலில் சிக்கியுள்ளது.

நெல்சன் திலிப்குமார் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு தளத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வீடியோ சமூக வலைத்தளங்களில் கசிந்துள்ளது. இந்த காட்சி விரைவாக பரவி ரசிகர்கள் மத்தியில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து படத்தின் தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக விளக்கம் வெளியிட்டுள்ளது. அதில், 'ஜெயிலர்-2' படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்ட வீடியோ அனுமதியின்றி வெளியிடப்பட்டுள்ளதாகவும், இது சட்டவிரோதமான செயல் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த காட்சிகளை பகிரும் அல்லது பரப்பும் சமூக வலைத்தள கணக்குகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

திரைப்படங்களின் காட்சிகள் முன்கூட்டியே கசிவது, படக்குழுவின் உழைப்பையும் எதிர்பார்ப்பையும் பாதிக்கும் முக்கிய பிரச்சனையாகும். இதனால் ரசிகர்களும் இப்படிப்பட்ட கசிந்த காட்சிகளை பகிராமல் இருக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்படுகிறது. இந்த சம்பவம் தற்போது திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 16 வகை லட்சுமிகள்



1. ஸ்ரீதனலட்சுமி:- நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் இருக்க வேண்டும், போதும் என்ற மனதோடு நேர்மையுடன் வாழ்ந்தால் தனலட்சுமியின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.

2. ஸ்ரீவித்யாலட்சுமி:- எல்லா உயிரினங்களிலும் தேவியானவள் புத்தி உருவில் இருப்பதால் நாம் நம் புத்தியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அன்பாகவும், இனிமையாகவும் பேச வேண்டும். யார் மனதையும் புண்படுத்தாமல் நடந்து கொண்டால் ஸ்ரீவித்யாலட்சுமியின் அருளைப் பெறலாம்.

3. ஸ்ரீதான்யலட்சுமி:- ஸ்ரீதேவியானவள் பசி நீக்கும் தான்ய உருவில் இருப்பதால் பசியோடு, நம் வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்து உபசரித்தல் வேண்டும். தானத்தில் சிறந்த அன்னதானத்தைச் செய்து ஸ்ரீதான் யட்சுமியின் அருளை நிச்சயம் பெறலாம்.

4. ஸ்ரீவரலட்சுமி:- உடல் பலம் மட்டும் வீரமாகாது மனதில் உறுதி வேண்டும், ஒவ்வொருவரும் தாங்கள் செய்த தவறுகளையும் பாவங்களையும் தைரியமாக ஒப்புக் கொள்ள வேண்டும், நம்மால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, இனி தவறு செய்ய மாட்டேன் என்ற மன உறுதியுடன் ஸ்ரீவரலட்சுமியை வேண்டினால் நன்மை உண்டாகும்.

5. ஸ்ரீசவுபாக்யலட்சுமி:- ஸ்ரீதேவி எங்கும் எதிலும் மகிழ்ச்சி உருவில் இருக்கின்றாள். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு மறற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருக்க வேண்டும். பிறர் மனது நோகாமல் நடந்தால் சவுபாக்கிய லட்சுமியின் அருளைப் பெற்று மகிழலாம்.

6. ஸ்ரீசந்தானலட்சுமி:- எல்லா குழந்தைகளையும் தன் குழந்தையாக பாவிக்கும் தாய்மை உணர்வு எல்லோருக்கும் வேண் டும். தாயன்புடன் ஸ்ரீசந்தான லட்சுமியை துதித்தால் நிச்சயம் பலன் உண்டு.

7. ஸ்ரீகாருண்யலட்சுமி:- எல்லா உயிர்களிடமும் கருணையோடு பழக வேண்டும், உயிர்வதை கூடாது, உயிர்களை அழிக்க நமக்கு உரிமை இல்லை, ஜீவ காருண்ய ஒழுக்கத்தை கடை பிடித்தால் ஸ்ரீ காருண்ய லட்சுமியின் அருளைப் பெறலாம்.

8. ஸ்ரீமகாலட்சுமி:- நாம் நம்மால் முடிந்ததை மற்றவர் களுக்கு கொடுக்க வேண்டும் என்றுமே நம் உள்ளத் தில் உதவ வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது. மேலும் ஸ்ரீ மகாலட்சுமி நம்மை பிறருக்கு கொடுத்து உதவும் படியாக நிறைந்த செல்வங்களை வழங்குவாள்.

9. ஸ்ரீசக்திலட்சுமி:- எந்த வேலையும் என்னால் முடி யாது என்ற சொல்லாமல் எதையும் சிந்தித்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்தால் ஸ்ரீசக்தி லட்சுமி நமக்கு என்றும் சக்தியைக் கொடுப்பாள்.

10. ஸ்ரீசாந்திலட்சுமி:- நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து வாழ பழக வேண்டும். நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதை இருக்குமிடத்திலேயே நாம் சாந்தப்படுத்த முடியும். ஸ்ரீசாந்தி லட்சுமியை தியானம் செய்தால் எப்பொழுதும் நிம்மதியாக வாழலாம்.

11. ஸ்ரீசாயாலட்சுமி:- நாம் சம்சார பந்தத்திலிருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல கடமையை செய்து பலனை எதிர்பாராமல் மனதை பக்தி மார்க்கத்தில் சாய்ந்து ஸ்ரீசாயாலட்சுமியை தியானித்து அருளைப் பெற வேண்டும்.

12. ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமி:- எப்போதும் நாம் பக்தி வேட்கையுடன் இருக்க வேண்டும், பிறருக்கு உதவ வேண்டும், ஞானம் பெற வேண்டும், பிறவிப் பிணித் தீர வேண்டும் என்ற வேட்கையுடன் ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமியைத் துதித்து நலம் அடையலாம்.

13. ஸ்ரீசாந்தலட்சுமி:- பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தார் பூமியை ஆள்வார். பொறுமையுடனிருந்தால் சாந்தலட்சுமியின் அருள் கிடைக்கும்.

14. ஸ்ரீகிருத்திலட்சுமி:- நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், மனதை ஒரு நிலைப்படுத்தி நேர்த்தியுடன் செய்தால், புகழ் தானாக வரும். மேலும் ஸ்ரீகீர்த்தி லட்சுமியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

15. ஸ்ரீவிஜயலட்சுமி:- விடாத முயற்சியும் உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால் நமக்கு எல்லா காரியங்களிலும் வெற்றி தான். ஸ்ரீவிஜயலட்சுமி எப்பொழுதும் நம்முடன் இருப்பாள்.

16. ஸ்ரீஆரோக்கிய லட்சுமி:- நாம் நம் உடல் ஆரோக்கியத்தை கவனித்தால் மட்டும் போதாது, உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், கோபம், பொறுமை, காமம், பேராசை போன்ற நோய்க் கிருமிகள் நம் மனதில் புகுந்து விடாமல் இருக்க ஸ்ரீஆரோக்கிய லட்சுமியை வணங்க வேண்டும்.


துயரம் நீக்கும் துர்க்கை வழிபாடு
கஷ்டங்கள் நீக்க துர்க்கை வழிபாடு செய்து துயரங்கள் நீங்குவதில் முதன்மையானது, துர்க்கை அம்மன் வழிபாடு.என்பதை உணர்வோம்

துன்பம் போக்கும் துர்க்கை அம்மன் 108 போற்றி

ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அஷ்டமி நாயகியே போற்றி
ஓம் அபயம் தருபவளே போற்றி
ஓம் அசுரரை வென்றவளே போற்றி
ஓம் அன்பர்க்கு எளியவளே போற்றி
ஓம் அமரரைக் காப்பவளே போற்றி
ஓம் அறம் வளர்க்கும் தாயே போற்றி
ஓம் அருள்நிறை அன்னையே போற்றி
ஓம் அருளைப் பொழிபவளே போற்றி
ஓம் ஆதாரம் ஆனவளே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் இன்னருள் சுரப்பவளே போற்றி
ஓம் இணையில்லா நாயகியே போற்றி
ஓம் இல்லாமை ஒழிப்பாய் போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈர மனத்தினளே போற்றி
ஓம் ஈடிணையற்றவளே போற்றி
ஓம் ஈஸ்வரன் துணையே போற்றி
ஓம் உக்ரரூபம் கொண்டவளே போற்றி
ஓம் உன்மத்தின் கரம் பிடித்தாய் போற்றி
ஓம் உள்ளொளியாய் ஒளிர்பவளே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண் கரம் கொண்டவளே போற்றி
ஓம் எலுமிச்சமாலை அணிபவளே போற்றி
ஓம் ஏழுலகும் வென்றவளே போற்றி
ஓம் ஏழ்மை அகற்றுபவளே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஒளிமணி தீபத்தாயே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் கவலையைத் தீர்ப்பவளே போற்றி
ஓம் காருண்ய மனம் படைத்தவளே போற்றி
ஓம் காளியே நீலியே போற்றி
ஓம் காபாலியை மணந்தவளே போற்றி
ஓம் காவல் நிற்கும் கன்னியே போற்றி
ஓம் கிரிராஜன் மகளே போற்றி
ஓம் கிருஷ்ண சகோதரியே போற்றி
ஓம் குமரனைப் பெற்றவளே போற்றி
ஓம் குறுநகை கொண்டவளே போற்றி
ஓம் குங்கும நாயகியே போற்றி
ஓம் குலம் விளங்கச் செய்தவளே போற்றி
ஓம் கிரியா சக்தி நாயகியே போற்றி
ஓம் கோள்களை வென்றவளே போற்றி
ஓம் சண்டிகேஸ்வரியே தாயே போற்றி
ஓம் சர்வ சக்தி படைத்தவளே போற்றி
ஓம் சந்தனத்தில் குளிப்பவளே போற்றி
ஓம் சர்வ அலங்காரப் பிரியையே போற்றி
ஓம் சாமுண்டி ஈஸ்வரியே போற்றி
ஓம் சங்கரன் துணைவியே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பவளே போற்றி
ஓம் சிவன்கரம் பிடித்தவளே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் சிம்மவாகனநாயகியே போற்றி
ஓம் சியாமள நிறத்தாளே போற்றி
ஓம் சித்தி அளிப்பவளே போற்றி
ஓம் செவ்வண்ணப் பிரியையே போற்றி
ஓம் ஜெய ஜெய துர்கா தேவியே போற்றி
ஓம் ஜோதி சொரூபமானவளே போற்றி
ஓம் ஞானம் அருளும் செல்வியே போற்றி
ஓம் ஞானக்கனல் கொண்டவளே போற்றி
ஓம் ஞாலம் காக்கும் நாயகியே போற்றி
ஓம் தயாபரியே தாயே போற்றி
ஓம் திருவெலாம் தருவாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் தீமையை அழிப்பாய் போற்றி
ஓம் துஷ்ட நிக்ரஹம் செய்பவளே போற்றி
ஓம் துர்கா பரமேஸ்வரியே போற்றி
ஓம் நன்மை அருள்பவளே போற்றி
ஓம் நவசக்தி நாயகியே போற்றி
ஓம் நவகோணத்தில் உறைபவளே போற்றி
ஓம் நிமலையே விமலையே போற்றி
ஓம் நிலாப்பிறை சூடியவளே போற்றி
ஓம் நிறைசெல்வம் தருவாய் போற்றி
ஓம் நின்னடி பணிந்தோம் போற்றி
ஓம் பக்தர்க்கு அருள்பவளே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பயிரவியே தாயே போற்றி
ஓம் பயத்தைப் போக்குபவளே போற்றி
ஓம் பயங்கரி சங்கரியே போற்றி
ஓம் பார்வதிதேவியே போற்றி
ஓம் புவனம் படைத்தவளே போற்றி
ஓம் புண்ணியம் மிக்கவளே போற்றி
ஓம் பூவண்ணன் தங்கையே போற்றி
ஓம் மகிஷாசுர மர்த்தினியே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மகேஸ்வரித் தாயே போற்றி
ஓம் மங்கையர்க்கரசியே போற்றி
ஓம் மகமாயித் தாயே போற்றி
ஓம் மாதர் தலைவியே போற்றி
ஓம் மாங்கல்யம் காப்பாய் போற்றி
ஓம் மாணிக்கவல்லியே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் முக்கண்ணி நாயகியே போற்றி
ஓம் முக்தியளிப்பவளே போற்றி
ஓம் முக்கண்ணன் தலைவியே போற்றி
ஓம் மூலப்பரம்பொருளே போற்றி
ஓம் மூவுலகம் ஆள்பவளே போற்றி
ஓம் யசோதை புத்திரியே போற்றி
ஓம் யமபயம் போக்குபவளே போற்றி
ஓம் ராகுகால துர்க்கையே போற்றி
ஓம் ரவுத்தரம் கொண்டவளே போற்றி
ஓம் வல்லமை மிக்கவளே போற்றி
ஓம் வாழ்வருளும் அம்மையே போற்றி
ஓம் விஷ்ணு துர்க்கையே போற்றி
ஓம் வீர நெஞ்சத்தவளே போற்றி
ஓம் வைஷ்ணவித்தாயே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி.

முனைவர்
**-பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

# சுரய்யா தியாப்ஜி வரலாறு






சுரய்யா தியாப்ஜி (19191978) ஒரு இந்திய கலைஞர் ஆவார், அவர் அசோகரின் சிங்கத் தலைநகரிலிருந்து அசோக சக்கரத்தைச் சேர்த்து , 1931 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் கொடியில் இருந்த சர்க்காவை மாற்றியமைத்து தற்போதைய இந்திய தேசியக் கொடியை உருவாக்குவதில் உதவினார் .

வேலை
காவி, வெள்ளை மற்றும் பச்சை நிற மூவர்ணக் கொடி, மையத்தில் சுழலும் சக்கரம். கொடியின் பல்வேறு பயன்பாடுகளைக் காட்டும் கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் சிறிய வெக்ஸில்லாலஜிக்கல் சின்னம் அல்லது சித்திர வரைபடம்.1931 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸால் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்வராஜ் கொடி .


இந்தியாவின் தற்போதைய தேசியக் கொடி
தற்போதைய இந்திய தேசியக் கொடியின் இறுதி வடிவத்தை பத்ருதீன் தியாப்ஜி வடிவமைத்ததாக வரலாற்றாசிரியர் ட்ரெவர் ராய்ல் தனது "தி லாஸ்ட் டேஸ் ஆஃப் தி ராஜ்" என்ற புத்தகத்தில் எழுதினார் . சுதந்திர தின இரவில் ஜவஹர்லால் நேருவின் காரில் பறந்த முதல் பிரதியை சுரையா தியாப்ஜி உருவாக்கினார் இந்திய வரலாற்றில் காணப்படும் முரண்பாடுகளில் ஒன்றின்படி, தேசியக் கொடியை வடிவமைத்தவர் பத்ரு-உத்-தின் தியாப்ஜி என்ற முஸ்லிம். முதலில் அந்தக் கொடியில் காந்தி பயன்படுத்திய சர்கா சின்னம் இருந்திருக்க வேண்டும். ஆனால் இது ஒரு கட்சி சின்னம், இது தவறான குறிப்பைத் தாக்கக்கூடும் என்று தியாப்ஜி நினைத்தார். பேரரசர் அசோகரை இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இருவரும் போற்றியதால், காந்தி இந்த வசனத்திற்கு ஒப்புக்கொண்டார். அன்றிரவு நேருவின் காரில் பறந்த கொடி தியாப்ஜியின் மனைவியால் சிறப்பாக உருவாக்கப்பட்டது. "

அரசியலமைப்பு சபையின் கீழ் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

சுரய்யா தியாப்ஜியின் மகள், சமூக சேவகி, வடிவமைப்பாளர் மற்றும் ஆர்வலர் லைலா தியாப்ஜி 2018 இல் தனது தாயார் மற்றும் தந்தை இருவரும் கொடி வடிவமைப்பில் ஈடுபட்டதாகவும், நேருவால் அவ்வாறு செய்ய நியமிக்கப்பட்டதாகவும், சிப்பாய், விஞ்ஞானி மற்றும் விரிவுரையாளர் பிங்கலி வெங்கய்யாவின் வடிவமைப்பின் வளர்ச்சியாக இருந்ததாகவும் எழுதினார் .

குடும்பம் மற்றும் வம்சாவளி
அவர் தியாப்ஜி குலத்தைச் சேர்ந்தவர் . அவர் 1937 முதல் 1941 வரை ஹைதராபாத்தின் பிரதமராகப் பணியாற்றிய சர் அக்பர் ஹைதாரியின் மருமகள் மற்றும் ஹைதராபாத்தில் முஸ்லிம் பெண்கள் கல்விக்காகப் பாடுபட்ட லேடி அமினா ஹைதாரியின் பேத்தி ஆவார். அவர் ஒரு அரசு ஊழியராகவும் பின்னர் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்த பத்ருதீன் தியாப்ஜியை மணந்தார் .

# கர்நாடகா கார் விபத்தில் ஒரே குடும்பத்தில் 9 பேர் உயிரிழப்பு



**பெங்களூரு, ஏப்.19:**

கர்நாடக மாநிலம் யாதகிரி மாவட்டம் சிர்வாரை சேர்ந்த கிருஷ்ணா நாயக் (56) நேற்று தனது குடும்பத்தினர் 9 பேருடன் சோராப்பூரில் உள்ள வேணுகோபால் சுவாமி கோயிலுக்கு சென்றார்.

அங்கு தரிசனம் முடிந்து காரில் சிர்வார் நோக்கி திரும்பினர். ஷாந்தாப்பூர் அருகே கார் சென்றபோது பெங்களூருவிலிருந்து குல்பர்கா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து மீது கார் வேகமாக மோதியது. இதில் இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயின.

இதில் காரில் பயணித்த கிருஷ்ணா நாயக் (56), அவரது மனைவி ஆனந்த கலா (50), அவரது மகன் சரணப்பா (26) உட்பட 6 பேர் உயிரிழந்தனர். சரணப்பாவின் மனைவி நிசர்கா (24), மகன் சித்தார்த் (3), மகள் சசிகலா (2) ஆகிய மூவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். பேருந்தில் பயணித்த 30-க்கும் மேற்பட்ட பயணிகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். விபத்து குறித்து போலீஸார் கூறுகையில், "ஒரே குடும்பத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். முதல்கட்ட விசாரணையில் கார் டயர் வெடித்ததில் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டது தெரிய வந்துள்ளது" என்றனர்.

# மத நடைமுறைகள் கோர்ட்டு ஆய்வுக்கு உட்பட்டவை: சபரிமலை வழக்கில் நீதிபதிகள் கருத்து



**புதுடெல்லி, ஏப்.19:**

சபரிமலை அய்யப்பன் கோவிலில் 10 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், அனைத்து வயது பெண்களும் சபரிமலை அய்யப்பன் கோவிலில் நுழையலாம் என்று கடந்த 2018-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு அரசியலமைப்பு சட்ட அமர்வு தீர்ப்பு அளித்தது.

அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதர வழிபாட்டு தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு குறித்த மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இம்மனுக்களை விசாரிக்க தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையில் 9 நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு சட்ட அமர்வு அமைக்கப்பட்டது.

மதநம்பிக்கை ககளை கோர்ட்டு கேள்வி எழுப்ப முடியாது என்று தேவசம் போர்டு சார்பில் ஏற்கனவே வாதிடப்பட்டு இருந்தது. இந்நிலையில் நேற்று மீண்டும் இம்மனுக்கள் விசாரணைக்கு வந்தன. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் ராஜீவ் தவான், "மனசாட்சி சுதந்திரம் பரந்து விரிந்தது. ஒரு தனிநபர், மதத்தை கேள்வி கேட்கலாம். ஆனால் அது மரியாதையுடனும், நம்பகமான முறையிலும் இருக்க வேண்டும்.

அப்போது, நீதிபதி பி.வி. நாகரத்னா குறுக்கிட்டு "மனசாட்சி என்பது மதத்தை விட பெரியது என்று சொல்கிறீர்களா? மனசாட்சி, மதச்சாயத்தை பூச வேண்டுமா?" என்று கேட்டார்.

நீதிபதி அமானுல்லாவும் அதே கருத்தை தெரிவித்தார்.

நீதிபதி அரவிந்த் குமார், "மதப்பிரிவு சார்ந்த நடைமுறைகள், நீதிமன்ற ஆய்வுக்கு உட்படுத்தப்படலாம்" என்று கருத்து தெரிவித்தார்.

# ஜனவரி-மார்ச் காலாண்டில் இந்திய ஸ்மார்ட்போன் சந்தை 3% சரிவு!

**புதுடெல்லி, ஏப்.19:**

இந்தியாவின் ஸ்மார்ட்போன் சந்தை நடப்பாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 3 சதவீத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இது கடந்த 6 ஆண்டுகளில் காணப்படாத மிக மோசமான சரிவாகும்.

ஸ்மார்ட்போன்களில் பயன்படுத்தப்படும் 'மெமரி' சிப்களின் விலை கடந்த 9 மாதங்களில் மட்டும் 4 மடங்கு உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வினால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

இதனால் நிறுவனங்கள் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, ரூ.15,000-க்கும் குறைவான விலை கொண்ட பட்ஜெட் ரக போன்களின் விற்பனை இந்த விலை உயர்வால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வரும் ஏப்ரல்-ஜூன் காலாண்டிலும் ஸ்மார்ட்போன் விற்பனை இரட்டை இலக்க சரிவைச் சந்திக்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, நுகர்வோர் தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதால், புதிய போன்கள் வாங்குவதை அல்லது பழைய போன்களை மாற்றும் முடிவைத் தள்ளிப் போடுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சரிவுகளுக்கு மத்தியிலும், இந்திய ஸ்மார்ட்போன் சந்தையின் விற்பனை அளவில் 'விவோ' நிறுவனம் 21 சதவீதப் பங்குடன் முதலிடத்தில் உள்ளது. சாம்சங் நிறுவனம் 2-ஆம் இடத்தைத் தக்க வைத்துள்ளது. புதிய பிராண்டுகளில் 'நத்திங்' நிறுவனம் 47 சதவீத வளர்ச்சியுடன் மிக வேகமாக வளரும் பிராண்டாக உருவெடுத்துள்ளது.

# அந்நியச் செலாவணி கையிருப்பு 70,094.6 கோடி டாலராக அதிகரிப்பு!

**மும்பை, ஏப்.19:**

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு, ஏப்ரல் 10ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பானது 382.5 கோடி டாலர் அதிகரித்து, 70,094.6 கோடி டாலராக இருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 3ஆம் தேதியுடன் முடிவடைந்த முந்தைய வாரத்தில், மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பு 906.3 கோடி டாலர் அதிகரித்து, 69,712.1 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டின் பிப்ரவரி 27ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பு 72,849.4 கோடி டாலர் என்ற உச்சத்தை எட்டியது. ஆனால், மத்திய கிழக்கு ஏற்பட்ட மோதலை தொடர்ந்து, ரூபாயின் மதிப்பு சரிவைச் சந்தித்தது. இதனையடுத்து, ரிசர்வ் வங்கி அந்நியச் செலாவணி சந்தையில் டாலர்களை விற்பனை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டதால், அந்நியச் செலாவணி கையிருப்பு சரிந்தது. ஏப்ரல் 10ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய இருப்பான, அந்நிய கரன்ஸி சொத்து மதிப்பு (எஃப்சிஏ), 312.7 கோடி டாலர் அதிகரித்து 55,598.3 கோடி டாலராக உயர்ந்ததாக ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த வாரத்தில் தங்கக் கையிருப்பின் மதிப்பு 601 மில்லியன் டாலர் அதிகரித்து, 12,134.3 கோடி டாலராக உயர்ந்ததாகவும், ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. அதே வேளையில், சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியாவின் கையிருப்பு 380.68 கோடி ரூபாய் அதிகரித்து, 485.7 கோடி டாலராக இருப்பதாக ரிசர்வ் வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

# எதிர்க்கட்சிகளின் கொண்டாட்டம் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவமானம் - அமித்ஷா



**புதுடெல்லி, ஏப்.19:**

மத்திய அரசின் மகளிர் இட ஒதுக்கீடு தொடர்பான மசோதா தோல்வி அடைந்ததை எதிர்க்கட்சியினர் கொண்டாடி வருகிறார்கள். இதனை கண்டித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா எக்ஸ் தளத்தில் பதிவிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

நாட்டின் பாதி மக்கள்தொகையான 70 கோடி பெண்களை ஏமாற்றி, அவர்களின் நம்பிக்கையை இழந்தபிறகு, ஒருவரால் எப்படி வெற்றியைக் கொண்டாட முடியும்?. எதிர்க்கட்சிகளின் இந்த கொண்டாட்டம். பல தசாப்தங்களாக தனது உரிமைகளுக்காக காத்திருக்கும் ஒவ்வொரு பெண் ணுக்கும் ஒரு அவமானம். காங்கிரசும், அதன் கூட்டணிக்கட்சிகளும் எத்தனை முறை பெண்களை காட்டிக் கொடுக்கும்? பல சமயங்களில், ஆணவத்தால் பிறக்கும் வெளித்தோற்ற வெற்றியின் மகிழ்ச்சி, உண்மையில், ஒரு மறைக்கப்பட்ட பெரும் தோல்வியாகும். இதை சிலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பயணிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய இண்டிகோ நிறுவனம்




**புதுடெல்லி, ஏப்.19:**

டெல்லியில் தெளிவற்ற வானிலையால், விமான பயணிகளுக்கு இண்டிகோ விமான நிறுவனம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. டெல்லியின் பல்வேறு நகரங்களில் நீடித்து வந்த வெப்பநிலையால் மக்கள் தவித்து வந்து சூழலில், பரவலாக கனமழை பெய்தது.

இதேபோன்று இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ததுடன், மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றும் வீசியது.

இதனால், டெல்லி நகரின் பல பகுதிகளில் மழை பெய்து குளிர்ச்சியான சூழல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, வளிமண்டல நிலையற்ற தன்மை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று டெல்லி மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இன்று பகுதியளவு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கின்றது. இதனை முன்னிட்டு, டெல்லியில் விமான இயக்கங்கள் தொடர்பான அறிவுறுத்தல்களை இண்டிகோ நிறுவனம் வழங்கியுள்ளது. நிலைமை மேம்பட்டதும் அதுபற்றிய தகவலை எங்களுடைய குழுக்கள் கண்காணித்து, உங்களுக்கு தெரிவிக்கும் என்றும் தெரிவித்து உள்ளது.

நீங்கள் இன்று பயணம் மேற்கொள்கிறீர்கள் என்றால், உங்களுடைய விமானத்திற்கான நிலையை பற்றி இணையதளங்கள் அல்லது செயலிகளுக்கு சென்று பரிசோதனைசெய்து கொள்ளுங்கள்.

உங்களுடைய பொறுமையையும், புரிதலையும் நாங்கள் பாராட்டுகிறோம். உங்களுடைய வசதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே எப்போதும் எங்களுடைய முன்னுரிமையாகும் என தெரிவித்து உள்ளது.

# மாநிலங்களவையை வழிநடத்த 6 பேர் கொண்ட குழு நியமனம்

**புதுடெல்லி, ஏப்.19:**

மாநிலங்களவை தலைவர், துணைத் தலைவர் இல்லாத நிலையில் வழி நடத்தும் குழுவுக்கு அதிமுக எம்.பி. தம்பிதுரை உட்பட 6 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ஹரிவன்ஷின் பதவிக்காலம், கடந்த ஏப்ரல் 9-ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து அந்த அவையின் எம்.பி.யாக ஹரிவன்ஷை குடியரசுத் தலைவர் நியமித்த நிலையில், கடந்த 10-ம் தேதி அவர் நியமன எம்பி-யாக பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில், மாநிலங்களவை துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் டெல்லியில் நேற்று நடைபெற உள்ளது.

அந்தப் பதவியை ஏற்கெனவே தொடர்ந்து 2 முறை ஹரிவன்ஷ் வகித்த நிலையில், அப்பதவிக்கு அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே மாநிலங்களவைத் தலைவர் துணைத் தலைவர் இல்லாத வேளைகளில், அந்த அவையை வழி நடத்தும் குழுவை குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான சி.பி. ராதா கிருஷ்ணன் நேற்று முன்தினம் மாற்றியமைத்தார். அதில் 6 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அந்தக் குழுவில், அதிமுக எம்பி தம்பிதுரை, பாஜக எம்பிக்கள் தினேஷ் சர்மா, பாங்னோன் கோன்யாக், கன்ஷியாம் திவாரி, பிஜு ஜனதா தள கட்சி எம்.பி. சஸ்மித் பத்ரா, காங்கிரஸ் எம்.பி. ஃபுலோ தேவி நேதாம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். மாநிலங்களவை பொதுச் செயலர் பி.சி.மோடி வெளியிட்டுள்ள அறிவிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்துங்கள்; மத்திய அரசுக்கு காங்கிரஸ் வலியுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.19:**

நாடாளுமன்ற மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 543 ஆக உள்ளது. இந்த தொகுதிகள் 1971 மற்றும் 2001ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 2011ம் ஆண்டு மக்கள் தொகைக்கு ஏற்ப நாடாளுமன்றத்தில் மக்களவை தொகுதிகளை மறுவரையறை செய்து அதன் எண்ணிக்கையை உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டது.

அதன்படி தற்போது உள்ள 543 மக்களவை தொகுதிகள் 850 ஆக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. மாநிலங்களுக்கு 815 தொகுதிகளும், யூனியன் பிரதேசங்களுக்கு 35 தொகுதிகளும் என மொத்தம் 850 தொகுதிகளாக மறுவரையறை மூலம் அதிகரிக்கக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. தொகுதிகளை மறுவரையறை செய்து மக்களவை தொகுதிகளை 850 ஆக உயர்த்தியப்பின் நாடாளுமன்ற மக்களவையில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கவும் மத்திய அரசு திட்டமிட்டது. இது தொடர்பாக தொகுதி மறுவரையறை மசோதா - 2026, 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா, யூனியன் பிரதேசங்கள் சட்டத்திருத்த மசோதா ஆகிய 3 மசோதாக்களை மத்திய அரசு தாக்கல் செய்தது. இந்த தொகுதி மறுவரையறையால் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைந்து வட மாநிலங்களில் ஆதிக்கம் அதிகரிக்கும் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. இதனிடையே, தொகுதி மறுவரையறை உள்பட 3 மசோதாக்கள் மீதும் மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்பில் 528 எம்.பி.க்கள் பங்கேற்ற நிலையில் மசோதாக்களுக்கு 298 பேர் ஆதரவும், 230 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

மசோதா வெற்றிபெற 3ல் 2 பங்கு ஆதரவு அதாவது 352 எம்.பி.க்கள் ஆதரவு தேவை என்ற நிலையில் 298 எம்.பி.க்கள் மட்டுமே ஆதரவு அளித்தனர். இதனால் தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்தது.

அதேவேளை, சட்டசபை, நாடாளுமன்ற தேர்தலில் மகளிருக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் மசோதா கடந்த 2023ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவை நேற்று மத்திய அரசு அரசாணையாக வெளியிட்டது. அதேவேளை, புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் மட்டுமே மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டு சட்டம் அமலுக்குவரும் என்று மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 2029 நாடாளுமன்ற தேர்தலில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்று மத்திய பாஜக அரசை காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

# அம்பானியை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தில் அதானி!

**புதுடெல்லி, ஏப்.19:**

துறைமுகங்கள் முதல் எரிசக்தி வரையிலான பெருநிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட தொடர் வளர்ச்சியையடுத்து, குஜராத்தைச் சேர்ந்த பெறும் தொழிலதிபரான கௌதம் அதானி, முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி, இந்த பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், கௌதம் அதானியின் நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான ஏற்றம், அவரின் நிகர சொத்து மதிப்பை வெகுவாக உயர்த்தியுள்ளது. கோடீஸ்வரர்கள் தரவரிசையின் அடிப்படையில், கௌதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 92.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது. அதே வேளையில், 90.8 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஆசியாவின் 2-வது இடத்தில் உள்ளார் முகேஷ் அம்பானி. தனது பெயரிலான குழுமத்தின் நிறுவனரான அதானி, நாட்டின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர் மற்றும் தனியார் விமான நிலைய இயக்குநராக உள்ளார். அதே வேளையில் உலகின் மிகப்பெரிய நிலக்கரி வர்த்தகர்களில் ஒருவராகவும் திகழ்கிறார். உலகின் 500 பணக்காரர்களைக் கண்காணித்து, தினசரி புதுப்பிக்கப்படும் பட்டியலில் உள்ள 'ப்ளூம்பெர்க்' கோடீஸ்வரர்கள் பட்டியலில் கௌதம் அதானி தற்போது 19வது இடத்தில் உள்ளார்.

அதானியின் சொத்துகள் பெரும்பாலும், குழுமத்தின் பட்டியலிடப்பட்ட முதல் 10 நிறுவனங்களில் அவர் வைத்திருக்கும் பங்கு முதலீடுகளிலிருந்து பெறப்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட எழுச்சியானது, அதானி குழுமப் பங்குகளின் சந்தை மதிப்பில் பல பில்லியன் டாலர்களை இணைத்துள்ளது. இதற்கு நேர்மாறாக, எரிசக்தி, தொலைத்தொடர்பு மற்றும் சில்லறை வர்த்தகம் ஆகிய துறைகளில் பரந்து விரிந்துள்ள தனது முதன்மை குழுமமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸை ஆதாரமாகக் கொண்ட முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு, மிதமான வளர்ச்சியையே கண்டுள்ளதால், ஆசியாவின் கோடீஸ்வரர் தரவரிசை பட்டியலை மாற்றியமைத்துள்ளது.

உலக அளவில் 656 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஸ்பேஸ்-எக்ஸின் தலைமை நிர்வாகியான எலான் மஸ்க், கோடீஸ்வரர் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார்.

# நாட்டில் பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173-வது ஆண்டு நிறைவு: அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம்





**தானே, ஏப்.19:**

பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173-வது ஆண்டு நிறைவு பெற்றுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது பயணிகள் ரயில் போக்குவரத்து 1853-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் தேதி மகாராஷ்டிர மாநிலம் போரி பந்தர் (மும்பை) மற்றும் தானே இடையே தொடங்கப்பட்டது. இந்த போக்குவரத்து தொடங்கப் பட்டு நேற்றுடன் 173-வது ஆண்டு நிறைவடைந்துள்ளது. இதுதொடர்பாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் தானே ரயில்வே பாலம், அம்ரித் பாரத் ரயில் ஆகிய புகைப்படங்களை ஒருங்கிணைத்து ஒரே புகைப்படமாக நேற்று வெளியிட்டு 'பயணம் தொடர்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய ரயில்வேயின் 173 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில், தானே ரயில்வே பாலம், ஒரு பழங்கால ரயிலையும் சித்தரிக்கும் நம்பகமான காப்பகப் புகைப்படத்தையும் நாங்கள் பகிர்ந்துள்ளோம். இதன் மூலம், வரலாற்றுப் பதிவு சரிபார்க்கப்பட்ட ஆவணங்களுடன் ஒத்துப்போவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# சிறுமி பாலியல் பலாத்கார வழக்கில் 3 குற்றவாளிகளுக்கும் 95 ஆண்டு சிறை

## உடந்தையாக இருந்த தாய்க்கும் 95 ஆண்டு சிறை



**சிவகங்கை, ஏப்.19:** 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் 3 குற்றவாளிகளுக்கும் 95 ஆண்டு சிறை தண்டனை, உடந்தையாக இருந்த தாய்க்கு 95 ஆண்டு சிறை தண்டனையும் வழங்கி சிவகங்கை போக்சோ நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கியது. சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரைச் சேர்ந்தவர் அக்பர் அலி (71), புதுக்கோட்டை மாவட்டம் அழகியநாயகிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் முருகேசன் (55), அரியலூரைச் சேர்ந்தவர் சரவணன் (41). இவர்கள் மூவரும் கடந்த 2021ல் 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தனர். இதற்கு சிறுமியின் தாயாரும் உடந்தையாக இருந்ததாக கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமி, சம்பவம் குறித்து தோழியிடம் தெரிவிக்க, அவர் குழந்தைகள் நலக்குழுவினரிடம் தகவல் தெரிவித்தார். இதையடுத்து திருப்புத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குழந்தைகள் நலக்குழு சார்பில் புகார் அளிக்கப்பட்டது. இதன்பேரில் அக்பர் அலி அம்பலம், முருகேசன், சரவணன், சிறுமியின் தாய் மற்றும் 2 பெண்கள் உள்பட 6 பேர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிந்து அவர்களை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை சிவகங்கை போக்சோ விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணை முடிந்த நிலையில் நீதிபதி கோகுல் முருகன் நேற்று தீர்ப்பளித்தார்.

அதில், 'குற்றஞ்சாட்டப்பட்ட அக்பர் அலிக்கு 50 ஆண்டு சிறை, ரூ.15 ஆயிரம் அபராதம், முருகேசனுக்கு 25 ஆண்டு சிறை, ரூ.11 ஆயிரம் அபராதம், சரவணனுக்கு 20 ஆண்டு சிறை ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். மேலும், உடந்தையாக இருந்த சிறுமியின் தாய்க்கு 95 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் மற்ற இருவரை விடுதலை செய்து உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# சத்தியமங்கலம் அருகே கார் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்த விபத்தில் கல்லூரி மாணவர் பலி

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் இட்சிபட்டி பகுதியைச் சேர்ந்தவர் பிரணித் குமார் (21). இவர் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் உள்ள தனியார் கல்லூரியில் பி.டெக் படித்து வந்தார். இதே கல்லூரியில் இவரது நண்பரான அந்தியூர் பகுதியைச் சேர்ந்த மோகன்ராஜ் (21), திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த பிரதீப் (21), திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியை சேர்ந்த நிகிலேஷ் குமார் (21) லோகேஷ் (21) ஆகியோர் ஒன்றாக படித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று இறுதி தேர்வை எழுதிவிட்டு நண்பர்கள் இருந்துள்ளனர். இன்று அதிகாலை 3 மணி அளவில் காரில் பிரணித் குமார் மற்றும் நண்பர்கள் பண்ணாரி சென்று விட்டு பின்னர் மீண்டும் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

காரை பிரணித் குமார் ஓட்டி வந்தார். அப்போது கார் சிக்கரசன்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே வந்து கொண்டிருந்தபோது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி கவிழ்ந்தது.

இந்த விபத்தில் காரை ஓட்டி வந்த பிரணித் குமார் சம்பவத்திலேயே பரிதாபமாக இறந்தார். அவருடன் முன் இருக்கையில் அருகே அமர்ந்து வந்த அந்தியூரை சேர்ந்த மோகன்ராஜ் படுகாயம் அடைந்து சுயநலவை இழந்தார். காரின் பின்னிருக்கையில் அமர்ந்து வந்த பிரதீப், நிகிலேஷ் குமார், லோகேஷ் ஆகியோருக்கு கை, கால்களில் சிறப்பு காயங்கள் ஏற்பட்டன.

விபத்து நடந்ததும் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் இதுகுறித்து சத்தியமங்கலம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விபத்தில் படுகாயம் அடைந்த நான்கு பேரையும் மீட்டு சிகிச்சைக்காக சத்தியமங்கலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதில் மோகன்ராஜ்க்கு நினைவு திரும்பாததால் மேல் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்தில் உயிரிழந்த பிரணித் குமார் உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

# விளாத்திகுளத்தில் 105 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்: 3 பேர் கைது



**தூத்துக்குடி, ஏப்.19:** தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நாராயணன் மற்றும் போலீசார் நேற்று விளாத்திகுளம் எல்லைக்குட்பட்ட விருசம்பட்டி பகுதியில் ரோந்து பணி மேற்கொண்டனர்.

அப்போது அங்கு சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த 3 நபர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர்கள் அதே பகுதியைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து (வயது 38), ராஜ்(28) மற்றும் குளத்துரைச் சேர்ந்த சுரேந்திரன்(32) ஆகியோர் என்பதும், அவர்கள் சட்டவிரோத விற்பனைக்காக தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பதுக்கி வைத்திருந்ததும் தெரியவந்தது.

உடனடியாக மேற்சொன்ன போலீசார் அந்த 3 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்த 105 கிலோ 650 கிராம் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து விளாத்திகுளம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அலுவலர்களாக உள்ள மத்திய அரசு ஊழியர்களுக்கு தமிழ், ஆங்கிலம் தெரியாததால் வாக்குப்பதிவு பணியில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு



**சென்னை, ஏப்.19:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடி பணியில் தமிழ், ஆங்கிலம் தெரியாத மத்திய அரசு ஊழியர்களை நியமிப்பதால், வாக்குப்பதிவு பணியை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாக தேர்தல் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 5.73 வாக்காளர்கள் உள்ளனர். தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

வரும் ஏப்.23-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதற்காக தமிழகம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் சுமார் 3.40 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 3 லட்சம் பேர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச்சாவடியின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளர்களாக இருப்பர். வாக்குச்சாவடி அலுவலர்-1, 2 மற்றும் 3 ஆகியோரும் பணியில் இருப்பார்கள்.

இந்த தேர்தலில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மத்திய அரசின்கீழ் இயங்கும் கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆவடி படை உடை தொழிற்சாலை, கனரக வாகன தொழிற்சாலை, திருச்சி மற்று ராணிப்பேட்டையில் இயங்கும் பெல் நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர மத்திய அரசு நிறுவனங்களில் பணியாற்றுவோர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 2 கட்ட பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஒரு வாக்குசசாவடி தலைமை அலுவலர் மற்றும் அவர்கள்கீழ் பணியாற்றும் 3 அலுவலர்கள் என குழு உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான வாக்குச்சாவடிகள் இணைய குலுக்கல் முறையில் விரைவில் ஒதுக்கப்பட உள்ளன.

இந்நிலையில், மத்திய அரசு நிறுவன ஊழியர்கள் பலருக்கு இந்தி மட்டுமே நன்றாக தெரிந்திருக்கிறது. சிலருக்கு ஆங்கிலம் கூட தெரியவில்லை. வாக்காளர் பட்டியல் தமிழில் மட்டுமே அச்சிட்டு வழங்கப்படுகிறது.

இதனால், இவர்களை வாக்குச்சாவடி அலுவலர் 3-ல் மட்டுமே நியமிக்க முடியும். ஒரு வாக்குச்சாவடியில் இதுபோன்ற ஊழியர்கள் 2 பேர் வந்துவிட்டால், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பாடு திண்டாட்டம்தான்.

எனவே தமிழ் தெரியாதவர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதை தவிர்க்கலாம் என தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

# வருமானவரி அதிகாரிகளின் கார்களில் வாக்காளர்களுக்கு வழங்க பணம் கடத்தலா?

## குற்றச்சாட்டின் பேரில் போலீஸார் விசாரணை



**சென்னை, ஏப்.19:** தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி நெருங்கி வருகிறது. இந்தச் சூழலில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர்பணப் பட்டுவாடா செய்வதைத் தடுக்க தேர்தல் ஆணையம் பல்வேறு தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

ஆனாலும் சில அரசியல் கட்சிகள், பல்வேறு நூதன வழிகளில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்கை கவர முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, வருமானவரித் துறை அதிகாரிகள் பயன்படுத்தும் கார்கள் மூலம் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் கடத்திச் செல்லப்படுவதாக தகவல் அறியும் உரிமை செயற்பாட்டாளர் ஒருவர், ஆயிரம் விளக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் பாண்டி பஜார் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரில், "வருமானவரித் துறை மற்றும் வருமானவரித் துறை புலனாய்வுப் பிரிவுக்காக அதிகாரிகள் கார்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் மஞ்சள் வாகன பதிவெண் கொண்ட கார்களை எடுக்காமல், வெள்ளை பதிவெண் கொண்ட கார்களை எடுத்துள்ளனர்.

மேலும் அந்த கார்களில் விதிகளை மீறி வருமானவரித் துறை என்ற பெயர் பலகையை வைத்தும் விதிமீறல்களில் ஈடுபட்டுள்ளனர். தற்போது தேர்தல் சமயத்தில் இதுபோன்ற கார்கள் மூலம் சட்டவிரோதமாக பணம் கொண்டு செல்லப்படுகிறது.

அந்த கார்களின் ஓட்டுநர்கள் தங்களை உயர் அதிகாரிகளைப் போல் காண்பித்துக் கொண்டு தேர்தலில் சட்டவிரோதப் பணத்தை விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தனியார் கார்களை உடனடியாக தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்ய வேண்டும். அதிகாரிகளுக்கு தெரியாமல் இது நடைபெற வாய்ப்பில்லை. எனவே, வருமானவரித் துறை அதிகாரிகளின் கார்களையும் தேர்தல் அதிகாரிகள் சோதனையிட வேண்டும்.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகார் குறித்து தேர்தல் அதிகாரிகளும், போலீஸாரும் தனித்தனியாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிப்பு: ரேபிஸ் தொற்றால் 13 பேர் உயிரிழப்பு



**சென்னை, ஏப்.19:** தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ரேபிஸ் நோய் தொற்றால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகம் முழுவதும் சுமார் 25 லட்சம் தெரு நாய்கள் இருக்கலாம் என்று உத்தேச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே தெருநாய்களுக்கு ஓரளவு தடுப்பூசி போடப்படுகிறது. கிராமப்புறங்களில் நாய்களுக்கு எவ்விதத் தடுப்பூசியும் போடாததால், நகரப் பகுதிகளைவிட நாய்க்கடி பாதிப்பு கிராமப்புறங்களில் அதிகம் உள்ளன.

கடந்த 2025-ம் ஆண்டில் நாய்க்கடியால் 6 லட்சத்து 25,700 பேர் பாதிக்கப்பட்டதில், 34 பேர் ரேபிஸ் நோய் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தனர். இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை 2 லட்சத்து 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

13 பேர் ரேபிஸ் நோய் தொற்று பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 12,177, திருச்சியில் 9,939, திருவள்ளூரில், 9,265, திண்டுக்கல்லில் 8,239, விழுப்புரத்தில் 8,213 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, "நாய், பூனை, குரங்கு கடித்த காயங்களை முறையாக, கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தாமல் இருந்தால் தொற்று ஏற்படும். தடுப்பூசிகளை உரிய நேரத்தில் செலுத்தாமல் இருந்தால் ரேபிஸ் நோய் பரவுவதைத் தடுக்க முடியாது.

ஆழமான காயங்களுக்கு தடுப்பூசியுடன் சேர்த்து, ஆர்ஐஜி எனப்படும் ரேபிஸ் இன்யூனோகுளோபளின் தடுப்பு மருந்து செலுத்தலாம்.

முதல் நாள், மூன்றாவது நாள், ஏழாவது நாள் மற்றும் 21-வது நாள் என 4 தவணைகளாக ரேபிஸ் தடுப்பூசி செலுத்த வேண்டும்.

இம்யூனோ குளோபளின் மருந்தானது முதல் நாளிலேயே ரேபிஸ் தடுப்பூசியுடன் செலுத்தப்பட வேண்டும். காலதாமதாகவோ அல்லது அதை மட்டும் தனியாகவோ செலுத்தினால் பலன் இல்லை. இதைக் கடைபிடித்தால் ரேபிஸ் நோய் தொற்றை தடுக்கலாம்" என்றனர்.

# மதுரை பாண்டி கோயிலை கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும்

## அறநிலையத் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



**மதுரை, ஏப்.19:** மதுரை பாண்டி கோயிலை முழுமையாக இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் எடுக்கவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை பாண்டி கோயில் பரம்பரை பூசாரி உரிமை தொடர்பாக அறநிலையத் துறை பிறப்பித்த பல்வேறு உத்தரவுகளுக்கு எதிராக கோயில் பூசாரிகள் வழக்கு தொடர்ந்தனர்.

இதில் தனி நீதிபதி 2024-ல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி சீதாலெட்சுமி, தனம், பாண்டீஸ்வரி, ஆர்த்தி, ஜெகதீஸ்பாண்டியன் ஆகியோர் உயர் நீதிமன்ற அமர்வில் மேல்முறையீடு செய்தனர்.

இதை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: மதத்தை செல்வம் சேர்க்கும் போர்வையாக கருதக்கூடாது. பண பலனுக்காக பக்தியை வளர்க்கவும் முடியாது.

மதுரையின் காவல் தெய்வமாகப் போற்றப்படும் பாண்டி முனீஸ்வரர் கோயில் பூசாரிகள், கடவுளுக்குச் சேவை செய்யாமல் தங்களின் சொந்த ஆதாயத்துக்காகவும், ஆடம்பர வாழ்வுக்காகவும் பக்தர்களின் தட்டு காணிக்கையையும், உண்டியல் வசூலையும் பிரிப்பதற்காக தங்களுக்குள் சண்டையிடுகின்றனர். இப்பிரச்சினையால் ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டு மதச்சூழல் மாசுபடுத்தப்பட்டுள்ளது. கோயில் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடப்பதை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். இந்த கோயிலில் தட்டு வசூல் ஆண்டுக்கு ரூ.1 கோடியை தாண்டுவதாகவும், உண்டியல் வசூல் ஆண்டுக்கு குறைந்தது ரூ.4 கோடி வரை இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த பணம் கோயில் கணக்கில் வரவு வைக்காமல் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்டியல் வசூல் பூசாரியின் தனிப்பட்ட உரிமை அல்ல.

அது பக்தர்களின் நம்பிக்கையால் குவியும் பொதுவான வளம். அந்த வளத்தை தங்களின் குடும்ப சொத்தின் வருமானம் என்பது போல் பங்கு கேட்டு சண்டையிடுவது வேதனையானது.

அர்ச்சகர் வாழ்வாதாரத்துக்காக உண்டியல் வசூலில் ஒரு தொகை வழங்குவது வாரிசுரிமை அளிக்காது. இந்த வழக்கில் தனி நீதிபதியின் உத்தரவில் தலையிட முடியாது. இந்த வழக்கின் மேல்முறையீட்டு மனுதாரர்கள் உட்பட தனி நபர்கள் யாரும் கோயிலில் பரம்பரை பூசாரியாக உரிமை கோர முடியாது.

பரம்பரை அறங்காவலர்களை நீக்குவது தொடர்பாக அறநிலையத்துறை 4 வாரத்தில் முடிவெடுக்க வேண்டும். கோயில் நிர்வாகத்தை முழுமையாக அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும். மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

# பயணிகள் கவனத்திற்கு: சத்தமாகப் பேசினால் ரூ.500 அபராதம்...

## சென்னை மெட்ரோவில் புதிய ரூல்ஸ்!



**சென்னை, ஏப்.19:** சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகளுக்கு ஒழுங்குமுறைநடவடிக்கைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி மெட்ரோவில் அதிகசத்தத்துடன் மொபைல் ஃபோன்களை பயன்படுத்தக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மீறினால் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"மெட்ரோ ரயில் பயண ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி, சக பயணிகளின் வசதிக்கும், அமைதிக்கும் மதிப்பளிக்குமாறு அனைத்துப் பயணிகளையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

மெட்ரோ ரயில் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) சட்டம் 2002 பிரிவு 59-ன் கீழ், சக பயணிகளுக்குத் தொந்தரவு விளைவிப்பதோ அல்லது அவர்களின் வசதிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

குறிப்பாக அலைபேசியில் உரத்த குரலில் உரையாடுதல், செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக்கி (Headphones) இன்றி இசை அல்லது வீடியோக்களைப் பார்ப்பது, அலைபேசியில் மெட்ரோ ரயில்களிலும், வளாகங்களிலும் ஒலிபெருக்கி வசதியைப் பயன்படுத்துதல் (Speaker mode); மேற்கண்ட செயல்கள் மூலம் அதிகப்படியான இரைச்சலை ஏற்படுத்தும் வகையில் அலைபேசிகளைப் பயன்படுத்துவதும், மற்றவர்களுக்கு இடையூறு விளைவிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

இந்தச் சட்டத்தின்படி, விதியை மீறும் பயணிகளுக்கு ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படலாம். மேலும், தேவைப்பட்டால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் மெட்ரோ வளாகத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே, சக பயணிகளின் பயணச் சூழலைக் கருத்தில் கொண்டு, அனைவரும் ஹெட்போன்களைப் பயன்படுத்துமாறும், மெட்ரோ இரயில் மற்றும் அதன் வளாகத்திற்குள் உரத்த குரலில் உரையாடுதல் மற்றும் ஸ்பீக்கர் மோட் பயன்பாட்டைத் தவிர்க்குமாறும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் நாளான வருகிற 23ம் தேதி ஊதியத்துடன் விடுப்பு அளிக்காத நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை

**தொழிலாளர் ஆணையர் எச்சரிக்கை**




**சென்னை, ஏப்.19:** தொழிலாளர் ஆணையர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் 23ம் தேதி நடக்கிறது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமான தொழில் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள், தொழிலாளர்களுக்கு தேர்தல் நாளான 23ம் தேதி வாக்களிக்க ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும்.

தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அலுவலர் மற்றும் உறுப்பினர்களான தொழிலாளர் இணை ஆணையர் (சென்னை) மற்றும் மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர் - தொலைபேசி எண் 7904646090, 7299007334, தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம் - 7904802429, 9043555123) என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 148 கன அடியாக சரிவு



**மேட்டூர், ஏப்.19:** தமிழக-கர்நாடக எல்லையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் காவிரி மற்றும் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் இன்று 3வது நாளாக நீர்வரத்து 200 கனஅடியாக நீடிக்கிறது.

மேட்டூர் அணைக்கு நேற்று 195 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 148 கனஅடியாக சரிந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக, வினாடிக்கு 1500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று 81.60 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 81.46 அடியாக சரிந்துள்ளது. நீர் இருப்பு 43.43 டிஎம்சி.

## சோழன்திட்டை அணையில் இருந்து தண்ணீர் சுசீந்திரம் தெப்பகுளம் வாய்க்காலில் உள்ள அடைப்பு சரிசெய்யும் பணி

**நாகர்கோவில், ஏப்.19:** சுசீந்திரம் தெப்பகுளத்திற்கு சோழன்திட்டை அணையில் இருந்து தண்ணீர் கொண்டு வரும் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரிசெய்யும் பணி நடந்தது. சுசீந்திரம் தாணுமாலையன்சுவாமி கோயில் தெப்பகுளத்தில் இடிந்த மதில்சுவர் மற்றும் மையமண்டபம் சீரமைக்கும் பணி ரூ.1 கோடியே 43 லட்சம் செலவில் தொடங்கியது. பழமை மாறாமல் மதில்சுவர் அமைக்கும் பணியும், மையமண்டபம் சீரமைக்கும் பணியும் வேகமாக நடந்து வந்தது. சித்திரைமாத தெப்பதிருவிழா தொடங்குவதற்கு முன்பு பணியை முடிக்க அறநிலையத்துறை அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

இந்தநிலையில் சீரமைக்கும் பணி கடந்த 2 தினங்களுக்கு முன்பு முடிவு அடைந்தது. இந்த நிலையில் தெப்பதிருவிழா நாளை(18ம் தேதி) தொடங்குகிறது. தெப்பவிழா வருகிற 27ம் தேதி நடக்கிறது. தெப்பவிழாவிற்கு தேவையான தண்ணீர் சுசீந்திரம் பழையாற்றில் இருந்து எடுக்க முடிவு செய்யப்பட்டது. தற்போது கோடைகாலம் என்பதால், ஆற்றில் குறைவான தண்ணீர் வந்துகொண்டு இருப்பதால், தெப்பகுளத்திற்கு வரும் மடைவழியாக தண்ணீர் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து சோழன்திட்டை அணையில் இருந்து மோட்டார் மூலம் பம்பிங் செய்து கொண்டுவரமுடிவு செய்யப்பட்டது. அதன்படி இரண்டு பெரிய மோட்டார் மூலம் அணையில் இருந்து தண்ணீர் பம்பிங் செய்யப்பட்டு, தெப்பகுளத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டு, பணிகள் இரவு பகல் பாராமல் நடந்து வருகிறது. சோழன்திட்டை அணையில் இருந்து தெப்பகுளத்திற்கு குறைந்த அளவே தண்ணீர் வந்தது. தண்ணீர் கொண்டுவரும் வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டு இருப்பதை அறிந்த அறநிலைத்துறை அதிகாரிகள், அந்த அடைப்பை எடுக்க நடவடிக்கை மேற்கொண்டனர். அதன்படி நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அடைப்பை எடுக்கும் வாகனத்தை வரவழைக்கப்பட்டு, தெப்பகுளத்திற்கு வரும் வாய்க்காலில் உள்ள அடைப்பை எடுக்கும் பணி நடந்தது. தெப்பவிழாவிற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் தெப்பகுளத்தை நிரப்ப போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காற்றழுத்த தாழ்வுப்பாதை நீடிப்பு தமிழகத்தில் சில இடங்களில் மழை: வெப்பமும் அதிகரிக்கும்



**சென்னை, ஏப்.19:** தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக ஒருசில இடங்களில் நேற்று மழை பெய்துள்ள நிலையில், 3 மாவட்டங்களில் 104 டிகிரி வெயில் கொளுத்தியது. இதையடுத்து, படிப்படியாக வெப்பநிலை அதிகரிக்கும். காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக சில இடங்களில் லேசான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நீடித்து வரும் வறண்ட வானிலை காரணமாக ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. பிற தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வானிலை நிலவியது.

அதன் காரணமாக ஈரோடு, கரூர், சேலம் மாவட்டங்களில் நேற்று 104 டிகிரி வெயில் கொளுத்தியது.

மேலும், வேலூர், திருச்சி, கோவை, தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் 102 டிகிரி வெயில் நிலவியது. வெப்பநிலை இயல்பைவிட 2-4 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 0.9 கிமீ உயரத்தில் மரத்வாடா முதல் மன்னார் வளைகுடா வரை உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலை கொண்டுள்ளது.

இதையடுத்து, மேற்கு தொடர்ச்சி மலை, டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை நேற்று பெய்தது. இதேநிலை 23ம் தேதி வரையில் நீடிக்கும். இன்றும், நாளையும் உள் தமிழக மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவு.

எனினும் படிப்படியாக வெப்பநிலை உயரும். இயல்பு நிலையை விட 4 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பநிலை அதிகரித்து காணப்படும். அதன் காரணமாக சில இடங்களில் அசவுகரியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. சென்னையில் இயல்புநிலையை ஒட்டியே வெயில் நிலவும். சில இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம்.

## பெரம்பூரில் திடீர் விசிட்..!- பெண்களுடன் அமர்ந்து விசில் கோலம் போட்ட விஜய்



**சென்னை, ஏப்.19:** த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்த விஜய் தொடர்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

விஜய்யை பார்க்க பெரும் கூட்டம் திரண்டதால் பெரம்பூர் பகுதியே ஸ்தம்பித்து போனது. அதன்பிறகு, தமிழகத்தின் மற்ற பகுதிகளில் விஜய் பிரசாரம் மேற்கொண்டார். சென்னையில் நேற்று முன்தினம் த.வெ.க. தேர்தல் அறிக்கையும் வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் பேசிய விஜய், எல்லோரும் தங்கள் வீடுகள் முன்பு விசில் கோலத்தை போட்டு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரின் வேண்டுகோள்படி தமிழகம் முழுவதும் த.வெ.க. தொண்டர்கள் நேற்று தங்கள் வீடுகள் முன்பு விசில் கோலத்தை போட்டனர்.

அதனை சமூக வலைத்தளங்களிலும் அவர்கள் பதிவிட்டு, மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்தநிலையில், த.வெ.க. தலைவர் விஜய் நேற்று மாலை திடீரென்று தான் போட்டியிடும் பெரம்பூர் தொகுதிக்கு சென்றார். கொடுங்கையூர், எம்.கே.பி.நகரில் உள்ள த.வெ.க. பணிமனைக்கு சென்றார். அவரின் வருகையை எதிர்பாராத நிர்வாகிகள் இன்ப அதிர்ச்சி அடைந்தனர்.

அவர்களை தோளில் தட்டிக்கொடுத்து தேர்தல் பணிமனைக்குள் சென்ற விஜய் உற்சாகமாக விசில் ஊதினார்.

தொடர்ந்து, பணிமனையை சுற்றிப்பார்த்த விஜய், த.வெ.க. பெண் தொண்டர்களுடன் இணைந்து, பணிமனை முன்பு விசில் கோலம் போட்டார். விஜய்யின் வருகையால் அந்த இடம் முழுவதும் மகிழ்ச்சியில் திளைத்தது.

அதற்குள் விஜய் வருகை குறித்து தகவல் அறிந்ததும் அங்கு பெரும் கூட்டம் கூடிவிட்டது. அவர்களிடம் விஜய் கைக்கூப்பி வாக்கு சேகரித்தார்.

அவர்களிடம் குறைகளையும் கேட்டறிந்தார். நிர்வாகிகளிடம், 'கொஞ்ச நாள்தான் இருக்கிறது. பணிகளை விரைவுபடுத்துங்கள்' என்று உற்சாகமூட்டினார்.

சிறிது நேரம் அங்கிருந்த விஜய் பின்னர் அங்கிருந்து காரில் ஏறி புறப்பட்டு சென்றார்.

விஜய்யின் திடீர் வருகை ஏன்? என்பது குறித்து த.வெ.க. நிர்வாகிகள் கூறும்போது,"பெருங்கூட்டம் திரண்டு விடக்கூடாது என்பதற்காக யாரிடமும் சொல்லாமல் விஜய் வந்தார். இது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. எங்களுடன் அவர் கலந்துரையாடினார்" என்றனர்.

## 100 சதவீதம் வாக்களிக்க கோரி படகில் பயணம் செய்து கலெக்டர் விழிப்புணர்வு



**திருப்பூர், ஏப்.19:** சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் படகில் பயணம் செய்து மாவட்ட கலெக்டர் மனிஷ் தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட தாராபுரம் (தனி), காங்கயம், அவிநாசி (தனி), திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), பல்லடம்,உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெற உள்ளது.

இதற்காக மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் மாவட்ட கலெக்டர் மனிஷ் படகில் பயணம் செய்து தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க கோரி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சங்கமித்திரை, சுற்றுலா அலுவலர் அரவிந்த்குமார், விளையாட்டு அலுவலர் ரகுக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி இயக்குநர் (பயிற்சி) ஹர்சா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அரசியல் கார்னர்

### "எனது மரணத்துக்காக ஒரு கூட்டம் காத்திருப்பு" - பாமக நிறுவனர் ராமதாஸ் கடும் வேதனை



**விழுப்புரம், ஏப்.19:** கடந்த சில தினங்களுக்கு முன் சேலம் பிரச்சாரக் கூட்டத்தில் மயங்கி விழுந்த பாமக நிறுவனர் ராமதாஸ் சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உடல்நலம் சீராகி தைலாபுரம் திரும்பினார். அங்குள்ள தனது இல்லத்தில் நேற்று அவர் தபால் வாக்கு செலுத்தினார்.

பின்னர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று இருந்த எனது குடும்பத்தை சிதைத்த பெருமை அன்புமணியின் மனைவி சவுமியாவைச் சேரும். என் பேத்திகளையும் மயக்கி, மாற்றி விட்டார்.

எனக்கு ஆஞ்சியோ செய்த போது, தமிழகத் தலைவர்கள் அனைவரும் நலம் விசாரித்த போதும் கூட அன்புமணி மற்றும் அவரது குடும்பத்தினர் வந்து பார்க்கவில்லை. 'எனக்கு வயதாகிவிட்டது, செயல்பட முடியாது' என்று பொய்யர் கூட்டம் தொடர்ந்து கூறி வருகிறது. நான் தினசரி கால் முதல் தலை வரை அனைத்துக்கும் பயிற்சி செய்கிறேன்.

உடல் நலம் ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் ஒரு வாரத்துக்கு பிரச்சாரம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கினறனர்.

சிறப்பாக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். முடியுமா என்று தெரியவில்லை. நமது பாமக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பாட்டாளி சொந்தங்கள் அனைவரும் முழு ஆதரவு அளித்து வாக்களிக்க வேண்டும்.

பாமகவை என்னிடம் இருந்து அபகரித்து விட்டனர். எப்போது எனக்கு மரணம் வரும் என ஒரு கூட்டம் காத்திருக்கிறது. மகன், மருமகள், பேத்திகள் கூட அப்படி நினைக்கின்றனர். அன்புமணி நல்ல பிள்ளை இல்லை.

குழப்பத்தை ஏற்படுத்தி கட்சியை அபகரித்து விட்டார். 'எனக்கு மனநிலை சரியில்லை' என்று கூறுகிறார். என்னுடைய படத்தை அவர்கள் போடக்கூடாது என வழக்கு தொடரப்பட்டுள்ளது. பாமக பலவீனமடையாது" என்றார்.

தொடர்ந்து பேசிய ராமதாஸ் மகள் வழி பேரன் முகுந்தன், "பிரச்சினை என்னிடம் இருந்து தொடங்கியதால், நான் பேசுகிறேன். எனக்கு எம்எல்ஏ சீட்டு தருவதாகவும், செலவை ஏற்றுக் கொள்கிறேன் என்றும் வாக்குறுதி அளித்திருந்தனர். இதற்கான ஆதாரம் உள்ளது.

இப்போது நான், அரசியல் எதுவும் வேண்டாம், அய்யாவுடன் மட்டும் இருக்கிறேன். அவர்களோ அய்யாவின் முகம், பெயர் வேண்டும். ஆனால் அய்யா வேண்டாம் என்கின்றனர். 'குடும்பத்தை பிரித்து விட்டார்' என்று ஜி.கே.மணி மீது குற்றம் சொல்கின்றனர்.

அன்புமணி, சவுமியா ஆகியோரின் பணத்தாசை மட்டுமே குடும்பத்தை பிரித்தது. நான் நிறைய விஷயங்களை பேசினால், அவர்களால் வெளியே வர முடியாது. அன்புமணிக்கும், அவரது இரு மகள்களுக்கும் சவால் விடுக்கிறேன். என்னுடன் உண்மையை பேச தயாரா? எங்கு அழைத்தாலும் நான் வருகிறேன்.

2019, 2020, 2021, 2024-ல் என்ன நடந்தது? என் அம்மா காலில் நீங்கள்தான் விழுந்தீர்கள். பாஜக என்னை எதையாவது செய்துவிடும் என என்னுடைய அம்மா காலில் விழுந்தது நீங்கள்தானே..! அதிமுகவின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தை போனில் தொடர்பு கொண்டு, மறுநாள் காலை வரச் சொன்னது நான்தானே! அனைத்து நிகழ்விலும் உங்களுடன் நான் இருந்துள்ளேன்.

அய்யா நினைத்தபடி செயல்பட்டிருந்தால், ஆட்சி அதிகாரத்தில் பாமக இருந்திருக்கும். தன்னுடைய பிள்ளைக்காக சமரசம் செய்த காரணத்தால், பாமக அங்கீகாரத்தை இழந்துள்ளது. அய்யாவை நம்பி வன்னியர்கள் வந்தார்கள். நீங்கள் யாரை வேண்டுமானாலும் நம்புங்கள், அவர்களை நம்பாதீர்கள்" என்றார்.

### அதிமுகவில் யாரையும் வளர விடாதவர் செங்கோட்டையன் - எடப்பாடி பழனிசாமி



**சென்னை, ஏப்.19:** அதிமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

* செங்கோட்டையன் திமுகவின் உளவாளி.

* அதிமுகவில் இருந்தபோதே உளவாளியாக இருந்தவர் செங்கோட்டையன். சட்டசபையில் திமுகவை எதிர்த்து பேசாதவர்.

* ஜெயலலிதாவை இழந்த பிறகு தாயில்லாத பிள்ளையாக தவித்தபோது அதிமுகவை உடைக்க முயன்றவர்களுக்கு துணை போனவர் செங்கோட்டையன்.

* அதிமுகவில் யாரையும் வளர விடாதவர் செங்கோட்டையன், சிறுமையாக பேச ஆரம்பித்து செல்வாக்கை இழந்து விட்டார்.

* செங்கோட்டையன் ஈரோடு மாவட்டத்தில் யாரையும் வளர விட மாட்டார். அவரால் முத்துசாமி போன்றோர் கட்சியை விட்டு சென்றனர்.

* மக்களை அடிமைகளாக பார்க்கிறார் செங்கோட்டையன்.

* திமிர் பிடித்த, பொறாமை குணம் கொண்டவரான செங்கோட்டையன் நாட்டிற்கு தேவையா?

* மத்திய அரசின் நிதியுதவி இல்லாமல் அத்திக்கடவு-அவிநாசி திட்டம் முழுக்க மாநில அரசு நிதியில் மேற்கொண்டோம்.

* சேலம் எடப்பாடி சட்டசபை தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறேன். 1 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM